உ

வாழ்க உலகெலாம்

ஞானசம்பந்தம்

[தருமை ஆதீனத் திங்கள் வெளியீடு]

மலர் 20 } சார்வரி - மார்கழி 10—1—61 { இதழ் 2

உ

திருச்சிற்றம்பலம்

பொன்றயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்றயங்க ஆடுவாய்,! பிஞ்ஞகா ! பிறப்பிலீ !
கொன்றையம் முடியினய் ! கூடலால வாயிலாய் !
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே. (சம்பந்தர்)

திருச்சிற்றம்பலம்

பாவை நெறியால் பயன் விளைந்தது !

தமிழ்நாட்டில் மட்டும் இல்லாமல் தமிழர் வாழும் பகுதிகளிலெல்லாம் இப்போது ஒரு புதிய மலர்ச்சி ஏற்பட்டிருக்கிறது ; உற்சாகம் உண்டாகியிருக்கிறது ; உணர்ச்சி உருவாகி யிருக்கிறது. அம்மலர்ச்சியும், உற்சாகமும், உணர்ச்சியும் எதனுல் உண்டாயின என்று எண்ணிப் பார்க்கும்போது நமக்கோரின்பம் பிறக்கும். கடவுள் நம்பிக்கையின் உறுதியினுல் எழுந்த புதிய மலர்ச்சி இது. அவனன்றி ஓரணுவும் அசையாது என்ற தமிழகத்துப் பழமொழி பொய்க்குமா என்ன ? இறைவனிடம் உள்ள

உறுதியான நம்பிக்கையை இழந்திருந்த பலரும் இப்போது மீண்டும் பெற்று வருகிறார்கள் ; ஏத்தி வழிபடுகிறார்கள் ; இன்பம் அடைகிறார்கள். இந்த மலர்ச்சி எப்படி ஏற்பட்டது ?

மார்கழி மாதம் இதற்கு விடை சொல்லிவிடும். ஆம் ; திருவெம்பாவையும், திருப்பாவையும் முழங்காத - ஒலிக்காத ஊர் தமிழ்கூறு நல்லுலகில் இன்று இல்லையென்றே சொல்லி விடலாம். அன்புநெறி பரப்பும் இந்துமதத்தின் இருகண்களுக்குள் அமைந்த பாவைகளைப்போன்றவை இவ்விரண்டு பாவைப் பாடல்களும். அவை காட்டும் நெறியை விளக்கும் விளக்கச் சொற்பொழிவுகள் ஆங்காங்கு நிகழ்கின்றன. மணிவாசகப் பெருமான் கண்ட அத்திருவருட் காட்சி கொஞ்சம் கொஞ்சமாக உருப்பெற்றுவருகிறது. ஆடவரும், பெண்டிரும் நகரங்கள் முதல் சிற்றூர்கள் வரை எங்கும் திரண்டெழுந்து இவ்வருட் பாடல்களை அகமுருகி ஓதுகிறார்கள். அருளை அடைவிக்கும் அன்புநெறி நிற்கிறார்கள்.

பாவைப் பாடல் நெறி நின்று பயன்கொள்ளவேண்டும் என்ற எண்ணத்தின் உறுதியோடு தலைப்பட்டு நிற்கும் இந்தக் காட்சியே இம்மாற்றத்திற்குக் காரணம் என்று கூறலாம். 'ஒலம் இடினும் உணராய் உணராய் காண்' என்று மணிவாசகப் பெருந்தகையார் அருளியபடி, ஓலமிட்டும் உணராத மனித குலம் இப்போது அந்நிலை மாறிச் செந்நிலை எய்துகின்றது. 'ஏழைபங்காளனையே' பாடுகின்றது; 'ஊழி முதல்வனை'ப் பணிகின்றது ; 'செங்கணவனிடமும் திசைமுகனிடமும் எங்கும் இல்லாத இன்பம் நம்பால் எய்த' வேண்டும் என்னும் குறிக்கோளோடு இறைவன் அடிமலர்களை வழிபடுகின்றது. உலகத்தின் மூலைமுடுக்கிலெல்லாம் அன்பு நெறியின் மாட்சி விளக்கமும், தெய்வ ஞான நாட்டமும், அறத்தின் நிலையும் பிறவும் பெருகுதல் இன்று அரசியலிலும் காணும் காட்சியாக உள்ளது.

நம்நாட்டு நாயன்மார்களும் ஆழ்வாராதிகளும் போன்ற நல்லோர் காட்டிய நெறியைத் திருவெம்பாவையும் திருப்பாவையும் நமக்கு உணர்த்துகின்றன. தமிழர்களின் பெரும்

பேருக வாய்த்த அருஞ்செல்வங்கள் இவை. தருமை யாதீனச் சார்பில் ஆதீனத் திருக்கோயில்களிலெல்லாம் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்களின் அருளாணைப்படித் " திருவெம்பாவை மாநாடுகள் " நடைபெற்றுவருகின்றன. நல்லறிஞரும் மெய்யன்பரும் கூடி நலம் பெருக்கி வருகின்றார்கள். எல்லாம் குருவருளும் திருவருளும் இணைந்து நல்கும் அருளிப்பாடு என்பது தெளிவு.

மார்கழித் திங்கள் திருவெம்பாவையினால் மட்டும் சிறக்கவில்லை; சிவபிரான் திருநட்சத்திரமாகிய திருவாதிரை இதன்கண் இருந்தே விளங்குகின்றது. ஆதலின் பாவைப் பாடல் நெறியில் இறைவன் கருணை வெள்ளமும் பாய்ந்து வளப்படுத்திவருகிறது.

திருவாதிரையில் பெருமானைத் தொழுது தேனூறும் திருவெம்பாவைப் பாடல்களை ஓதி உய்யும் தமிழுலகிற்கும் உள்ளம் பொங்க, உணர்வு பொங்க, இன்பம் பொங்கச் செய்யும் தைப்பொங்கல் ஆகிய திருநாளும் நெருங்கிக் கொண்டிருக்கிறது; களி உண்ட களிப்போடும் பொங்கல் உண்ட பூரிப்பும் இணைய இருக்கிறது. பாவை நெறியால் பயன் விளைந்துள்ள இந்த இன்பமான இடைவேளையில் " ஞானசம்பந்தம் " தன் பொங்கல் வாழ்த்துக்களை அன்புலகத்திற்குத் தருகின்றது. தருவதில் பெருமையும் அடைகின்றது. N. B :- (மலர் 17. இதழ் 2. பக்கம் 35 பார்க்க).

திருவார் கமலைப் பதிவாழ்க அப்பதி சேரும் நின்றன்
மருவார் மரபும் திருநீறும் கண்டியும் வாழ்க அருட்
குருவாகும் நின்றன் திருக்கூட்டம் வாழ்கநற் கோநிரைகள்
தெருவாழ் தருமைத் திருஞான சம்பந்த தேசிகனே.

வளர்க சமய நெறி.

பெருகுக ஞானசம்பந்தம்.

பல்கலைச் செல்வரின் மணிவிழா

தமிழ் நாட்டின் சிறந்த பேரறிஞர்களில் ஒருவராகிய முதுபெரும்புலவர். டாக்டர். திரு. தே. போ. மீனுட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் அறுபதாண்டு நிறைந்து மணிவிழாப்பெறுகிறார். இது தமிழகத்திற்குப் பெருமகிழ்வையும், பெருமிததத்தையும் தரும் செய்தியாகும். தருமையாதீன ஆவணிமூல விழாவில் செந்தமிழ்ச் சொக்கர் திருவருளும், ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகா சந்நிதானம் அவர்களின் இன்னருளும் பன்மொழிச் செல்வரைப் 'பல்கலைச் செல்வர்' என்னும் சிறப்புப் பட்டம் நல்கிச் சிறப்பித்தன. சென்னைப் பல்கலைக் கழகமும், அண்ணாமலைப் பல்கலைக் கழகமும் மறக்கவியலாத மாபெருந்தலைவர் பல்கலைச் செல்வர். தம்வாழ்வையே தமிழ்ப்பணிக்கு அர்ப்பணித்துக் கொண்ட பெருந்தகைமையாளர். ஆராய்ச்சிக் கட்டுரைகள் பலவும், சீரிய ஆராய்ச்சி நூல்கள் பலவும் எழுதித் தமிழ்ப் பெருமக்கள் நெஞ்சில் நீங்கா இடம்பெற்ற அறிஞர். பல மொழிகளையும் கற்று அவற்றின் சாரமாக உள்ளவற்றைத் தமிழ் நாட்டில் மட்டுமின்றி இலங்கை முதலிய அயல்நாடுகளிலும் சென்று விரிவுரைகள் வாயிலாகப் பரப்பிவரும் பெரியார், வேதாந்தநெறியிலும் ஆராய்ந்து தேர்ந்த புலமையாளர். 'சேக்கிழாரும் கண்ணப்பரும்' என்பது முதலிய நூல்களால் சமய உலகிற்குப் புதியவிளக்கங்கள் பலபுகன்ற புண்ணியத்திருவினர். சிந்தாதிரிப்பேட்டை உயர்பள்ளிகளின் ஒப்பற்றதலைவர். இத்தகு திறம் பல பெற்ற திருவாளராகிய நம் பல்கலைச் செல்வர், திரு. தே. போ. மீனுட்சிசுந்தரம் பிள்ளை M.A., M.L., M.O.L., தருமை ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்களிடம் பக்தியும் அன்பும் உடையவர்; ஆதீனத் தமிழ்த் தொண்டுகளையும் பிறவற்றையும் அவ்வப்போது எழுத்தாலும் பேச்சாலும் பாராட்டிவரும் பண்பாளர்.

பல்கலைச் செல்வரின் மணிவிழா, சிறப்புற நிகழ்வது போன்றே அதேத்துச் சதாபிஷேகம் முதலிய பெருஞ்சிறப்புக்களும் பெற்று அத்தமிழறிஞர் நீடுழி வாழவேண்டும் என்பது நம் பிரார்த்தனை.

சிவ ஞான போதம்

கட்டுரை 24

(மலர் 20, இதழ் 1, பக்கம் 22 இன் தொடர்பு)

மூன்றாவது சூத்திரம்

" உளதில தென்றலின் எனதுடல் என்றலின்
ஐம்புலன் ஒடுக்கம் அறிதலின் கண்படில்
உண்டிவினை இன்மையின் உணர்த்த உணர்தலின்
மாயா வியந்திர தனுவினுள் ஆன்மா "

[உளது; (1) இலது என்றலின் (2) எனது உடல் என்றலின் (3) ஐம்புலன் (அறிதலின்) (4) ஒடுக்கம் அறிதலின் (5) கண்படில் (அ) உண்டி (ஆ) வினை இன்மையின் (6) உணர்த்த உணர்தலின் (7) மாயா இயந்திர தனுவினுள் ஆன்மா]

இந்நூற்பாவில் உள்ள முதன்மொழி ஆகிய 'உளது' என்பது 'ஆன்மா' என்னும் எழுவாய்க்குரிய பயனிலை யாதலின், 'இலது என்றலின்' முதலாக எண் இட்டுக்காட்டிய ஏழனோடும் சேர்த்து,

1. இலது என்றலின் ஆன்மா உளது.

2. எனது உடல் என்றலின் ஆன்மா உளது.

3. ஐம்புலன் அறிதலின் ஆன்மா உளது.

4. ஒடுக்கம் அறிதலின் ஆன்மா உளது.

5. கண்படில் உண்டிவினை இன்மையின் ஆன்மா உளது.

6. உணர்த்த உணர்தலின் ஆன்மா உளது.

7. மாயா இயந்திரதனுவினுள் ஆன்மா உளது என்று ஏழு வாக்கியம் ஆக்கிக் கோள்க. கோள்ளின் இச்சூத்திரம் ஆன்மா உண்டு என்றும், அதனை அறியக் கருதலளவை வேண்டிற்று என்றும், அவ்வளவை (அநுமானப் பிரமாணத்து)க்குரிய ஏதுக்களாக முதல் ஆறும் உள்ளன என்றும், ஏழாவது ஆன்மா உள்ள இடம் என்றும் அதன் பெயர் தனு என்றும் அஃது இயந்திரம் என்றும் அவ்வியந்திரம் 'மாயா' (என்றும் மாயையால் ஆனது என்றும் மாயையின் காரியம்) என்றும் எளிதின் உணரலாகும். ஆகவே, இச் சூத்திரம் என்நுதலிற்றோ எனின் ஆன்மப் பிரகாசம் உணர்த்துதல் நுதலிற்று என்றுணர்த்திய சூத்திரக்கருத்து முற்றும் உண்மை எனல் இனிது விளங்கும். 'மாயாவியந்திரதனு' என்னும் பேயரடையாற்பேறப்படும் குறிப்பேது ஏழாவதாயிற்று. இதைப்போல ஆன்மாவை விளங்க உணர்த்தும் ஆற்றல் வேறுண்டோ? மேய்கண்ட சூத்திரத்தின் அருமையும் பெருமையும் இதனாலும் ஒரு சிறிது வேளிப்படும்.

சூர்ணிக் கொத்துரை :-

" 1. 'இல்லை' என்கிற அறிவுடனே சொல்லுகையினாலே அறிவுயிர் உண்டு.

2. 'எனது உடல்' என்று போருட்பிறிதின் கிழமையாகச் சொல்லுகையினாலே உடற்குவேறாய் உயிருண்டு.

3. (புலன்) ஐந்தையும் ஒருவனே அறிதலின், ஒவ்வோன்றை மாத்திரம் அறிகிற ஐந்திற்கும்வேறாய் உயிர் உண்டு.

4. கனவுடலைவிட்டு நனவுடலிலே வருகையினாலே, அக்கனவுடற்கு வேறாய் உயிர் உண்டு.

5. நித்திரையிலும், பிராணவாயு, தோழில் பண்ணவும் சரீரத்துக்குப் புசிப்பும் தோழிலும் இல்லாதபடியினாலே, பிராண வாயுவுக்கு வேறாய் உயிர் உண்டு.

6. மறந்து மறந்து நினைக்கிறபடியினாலே மறவாமல் இருக்கிற அரனுக்கு வேறாய் உயிர் உண்டு.

7. எல்லாத் தத்துவங்களுக்கும் வேறு வேறு பெயர் இருக்கையினாலே, அந்த அந்தத் தத்துவங்களுக்கு வேறாய் உயிர் உண்டு"

இச்சூர்ணிகையால் இச்சூத்திரத்தின் பொருள் இனிது புலப்படும். இது மேல் 'அவையேதானே' (சூ. 2) என்று எடுத்துக்கோள்ளப்பட்ட உயிரின் உண்மை உணர்த்திற்று.

1. சூனியான்மவாதி (மாத்தியமிகன்) ஆன்மா என்பது சூனியமே அன்றி வேறு இல்லை என்பான். ('இன்மை' - சூனியம்),

அதற்கு மறுப்பு :- இலது என்றலின் ஆன்மா அந்த இன்மையின் வேறாய் உளது என்பது.

2. தேகான்மவாதிகள் (உலகாயதருள் ஒருவகையார்) உடம்பே ஆன்மா என்பார்கள்.

அதற்கு மறுப்பு :- 'எனதுடல் என்றலின் ஆன்மா அவ்வுடம்பின் வேறாய் உளது' என்பது.

3. இந்திரியான்மவாதிகள் இந்திரியங்களே (ஐம்புலன்களையும் தனித்தனி அறியக் கருவிகளாய ஐம்பொறிகளே) ஆன்மா என்பார்கள்.

அதற்கு மறுப்பு :- 'ஐம்புலனும் ஆன்மா அறிதலின்' (ஒன்றறிந்தது ஒன்றறியாத) இந்திரியங்களுக்கு வேறாய் உளது என்பது.

4, சூக்குமதேகான்மவாதிகள் ஐம்புலன்களுள் ஒவ்வொன்றையே அறியும் ஐம்பொறிகளும் ஒடுங்கிய ஒடுக்கத்தில் (கனவு நிலையில்) நிகழ்ந்தவற்றை அறியும் நுண்ணுடம்பே (சூக்கும தேகமே) ஆன்மா என்பார்கள்,

அதற்கு மறுப்பு :- ஒடுக்கம் அறிதலின் அவ்வோடுக்கத்தின் வேறாய் ஆன்மா உண்டு என்பது.

5. பிராணான்ம வாதிகள் பிராணவாயுவே ஆன்மா என்பார்கள்.

அதற்கு மறுப்பு :- 'கண்படில் உண்டி வினை இன்மையின் ஆன்மா உளது' என்பது.

6, விஞ்ஞானான்மவாதிகள் பிரமமே ஆன்மா என்பார்கள். வடமொழியில் 'விஞ்ஞானம்' என்பது பிரமத்தைக் குறிக்காதாம், 'ஞானம்' என்பதே சாத்திர சம்பிரதாய வார்த்தை. அதற்கு வேறாய்க் கீழான அறிவையே விஞ்ஞானம் என்பர் வடநூலார். இங்கு விஞ்ஞானம் பிரமத்தைக் குறிப்பதாகக் கொள்ளப்பட்டது,

அதற்கு மறுப்பு :- 'உணர்த்த உணர்தலின் ஆன்மா உளது' என்பது.

7. சமுகான்மவாதிகள் (சௌத்திராந்திகர், வைபாடிகர்) உடம்பு, பொறி, நுண்ணுடல், உயிர்க்காற்று, முதலிய அனைத்தும் கூடிய சமுதாயமே உயிராதல் அமையும். அவற்றுள் ஒன்று குறைந்தாலும் அறிவு நிகழாது என்பார்கள்.

அதற்கு மறுப்பு :- மாயாவியந்திரதனுவினுள் ஆன்மா உளது என்பது. மாயையின் காரியங்கள் அவை எல்லாம். அவை நிலை பெறாதன. ஆன்மா நிலைபேறுடையது. நிலை பெறாத அவை யெல்லாம் நிலைபேறுடைய ஆன்மா ஆகா. அவற்றின் வேறாய் ஆன்மா உளது. (தொடரும்)

பன்னெறி விளக்கம்

களமூர், பெருநாவலர், செ. செல்வப்ப முதலியார்

ஆதியிலே கெடு மற்பர் சிநேக மகல்விளக்கின்
சோதியிலே கெடும் விட்டிற் பறவை சொலற்கரிய
சாதியிலே கெடும் நீசப்பெண் போகஞ் சந்தேகமின்றி
பாதியிலே கெடு மெண்ணிச் செயாத்தொழில் பைந்தொடியே, 76

THE GOVERNOR'S VISIT TO DHARMAPURAM ADHINAM MUTT.

His Excellency Sri Medhi's

SPEECH

Friends and Devotees,

It is my great previlege and honour, that I have been able to come here, and get the blessings of His Holiness, who has completed his pilgrimage to Kailas and come back to spread the gospel of Hindu religion, to the human beings who are now at a loss to know what to do, and he will be able to guide the people in the right path. His Holiness has devoted his almost entire life to spread the gospel of Saivism and the different literatures, which are very old. The philosophical ideas that has been attached and connected with the Saivism is being spread throughout the Country with this Mutt as the centre. It is always the mutts and Ashrams and the Temples that have always been a centre for our shelter. From the human frailties, we go there to ennoble ourselves and to get the Guidance to strive for the realisation of the great God in whichever form one is inclined to accept. The God with His mercy has made men with different propensities and inclinations. So naturally, we the Hindus believe, that whatever is liked by him, if he sincerely follows that path, the God will give him guidance through His messenger like His Holiness and other devotees and guide in a way, so that he can realise also himself.

Now at this part of the day we are passing the whole world is passing-through a crisis. The

God's purpose of creation is, that He has given us, made us-the best creature with intellect and to think, to decide-what is right and what is wrong on the basis of our own traditions and the moral values and spiritual feelings of ourselves, and to live, to exist just like other animals. But the difference between man and animal is that he can realise and serve the purpose and objectives of his life, and he probes himself in such a way at the service of the humanity, that he goes forward step by step for the realisation in great future and fights the evil propensities with his knowledge,-with his intellect,-which is awake and that is the way, we try to strive and indeed, to struggle for fighting against the devil. The persons of the Holiness, the type of His Holiness, who were present here today is a constant guide to us. And I have come here to day not to speak very much, but to hear and receive his blessings in his sacred place. This is a good institution,-such a good institution that not only there are 27 centres to spread religious and cultural activities and other activities and to ennoble the people living in the surrounding areas. Besides, he has opened up schools, colleges, Oriental College,-and for the relief of the distressed, he has also started an Orphanage. It is not the sin of the man to become an orphan and it is the duty of us to take care of them. These are objects with which the God invokes in us, - that is an object divine-he has been made an orphan and we must take care of him. By so serving and taking care of him, we are ennobling our-selves to carry on the message of God, as service to the humanity. And besides, various literatures, - religious literature - is being published from this holy place in the language of these parts one of the oldest languages - Tamil. As far as I have been able to understand it will be about two thousand years old.

The Saints were born and have sung in very beatiful language when they had to strive for the realisation of the God and understand the philosophy and guide us to meet or conduct ourselves in our daily day behaviour with men and men, and so that we can sublimate and ennoble the entire surroundings with our own humble behaviour.

His Holiness has stated that I have come here and stopped the rain. Well, it is, as you know, I am a humble being. It sometimes happens, There is a proberb "a crow came and felled a fruit, ripe fruit and it fell as it is, it would have felled it." So it is that if anything is done it is the grace of the great God and the grace of the pious men like our Holiness who will be able to do such things and it is beyond my capacity, - humble capacity - So I wish well of everyone. Sometimes by accident this happens. But that should not be taken that my presence has ceased the rains.

This is the rainy season of the year, as a matter of fact, and the rain has most probably exhausted itself. although there were floods and the crops were submerged for awerd days in several places, but there is also a redeeming feature where the crops are standing fresh, there the water of Cauvery has brought in prosperity - manure in the form of silt from other parts and I am quite sure 10 to 20 percent of the yeild of these areas where the crops are standing will be much more in those areas, and there is still time to sow the crops. I in all those places where the crop has been damaged to some extent and that has been filled up with silt. I am quite sure, that without giving sufficient manure they will be able to grow much more crops, and I believe this.

God has given intellect, strength for human beings to think right and wrong and do things what will be

good to him and good to the society. But we ought to help ourselves We ought to hear and enlighten ourselves the message that He passes though visible beings. The messengerslike His Holiness and other sacred persons - and we are to realise and implement by our own efforts and indulge our own efforts. God will help us. That is what I feel. As a matter of fact, that it is all these when we mak an effort human efforts will then, when we make an effort, an honest effort, will be mistaking if we do not make efforts. He will guide us and He through His messengers who are holy persons and have gone far ahead in the realisation of God will always come and help us. His grace is always open. It is for us to assert and get it realised in our own life, in our conduct, in our duty, and in whatever we do and that thing it can only be brought in. Because, we are all spark of that great source of power - knowledge - or anything, which we can invigorate. It can be realised to solve our problems of right and wrong fight for right propensities & kill the evil propensities to get good propensities and if we can make an honest effort I am quite sure that the grace of God will come through a messenger like Him - His Holiness and help us to solve our own problem and the problem of the society. May god help all of us in our own efforts.

It is not possible for every one to renounce the world. Because, unless he has killed himself,-his anxieties and desires,-he need not go to and renounce, the world to become a sanyasi, If we were to think of it all these desires,-it is the first thing to kill all those desires and the like. And then only, I think, we believe in the migration of the soul after a hard task. These Holy men are sent to us so as to show the way of salvation and realisation of ourselves.

And I am glad he is in succession 25th Swamiji of this Math. For so many years, the Math is continually devoting itself in the religious preachings and doctrines and sadanas. I am quite sure, by sadanas he will not only widen his will, but also will be able to receive the superations give the gurus issue him sishya directions and advice and we must be able to receive them. It is the most important thing to carry out, even if it amounts to a little bit of difficulty to carry it out. We must subordinate ourselves with a little personal interest to carry out the message and try to realise what the Guru says. And so in the presence of the present aegis of a great country, we will with great devotiontry to hear and understand what they say and how to act and how to do good to oneself as well as to the humanity atlarge.

We are passing through a critical stage in the history of the world. God has created us to do good to ourselves and to the people. He has placed enough resources, minerals and other resources-and by our intellect, we have to find out how the Nature's Law can be understood and how it can be utilised and harvest the natural resources for the benefit of ourselves; not in a selfish way, but with a view to share this prosperity with every one, so that every one may think equal and share the glow and prosperity of the country that we have had. If we can work in this fashon, I am quite sure, God, with His infinite mercy, will always help us and guide us. And have no right as a matter of fact, because, as you know, there is a lot of stories and puranas, which shows that the Asuras generally, by devotion and certain qualities becomes proud; and on account of his pride, he is thrown himself. So, naturally on account of this prosperity, the idea of and serving sharing it i should be there. A rich

or material prosperity can make a man proud of his possession and that is the story, which has lowered him in the spiritual field and moral field.

So in order to fight that,-this material prosperity that we want to acquire and enrich the country, must be based on Karma, moral principles and spiritual ideas, and we can carry them out and I am quite sure that is why that every one should be considered as equals and the spark of God; in every living being. Not only the Law effectually is to be extended to the human beings, but we want to extend it to the animal kingdoms and to others. God pervades in animate and inanimate beings and every where. If we can realise that idea, where is the room for quarrel. There will be no room for quarrel. So, we will have to fight our own battle, right and wrong and whether we help the creation, the purpose of the creation of the God, it has to be judged by our own actions, I am quite sure the teachings of His Holiness and other saints that have passed before, will have great valuable evidence if we try to understand their message in this way.

It is not for every one to renounce the world and go but even by living in the world, one can be religious with the grace of God and people, religious people and spiritual people like His Holiness. I said, that I have come here only to receive the blessings of His Holiness and to get the grace of God through him so that I can act in a way that will be conducive to the best interest of the Country and the people.

Jai Hind.

சிவ சிவ

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம்
25 ஆவது குருமகாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய
சுவாமிகள் அவர்களின்
அருளாசியில் திகழும்
மாயூரம் ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்தர் வார வழிபாட்டுத் திருக்கூட்டம்
25—12—60-ம் நாள் ஞாயிறன்று
திருப்பனந்தாள் தாடகையீச்சரத்தில் வழிபாடாற்றியபோது
பனசைச் சிவனடியார் திருக்கூட்டத்தினர்
கயிலைக் குருமணியின் கழல் போற்றி

வாசித்தளித்த பாமலர்

குருஞான சம்பந்த குருவின் பேரால்
குலவவொரு வழிபாட்டுக் கூட்டம் கண்டு
திருஞானம் பிள்ளையைத் தலைவ ராக்கிச்
செயற்படுத்தி ஆட்கொள்ளும் தேவே போற்றி !
மருவான மயல்போக்கும் மருந்தே போற்றி !
மலைக்கெல்லாம் மேன்மலையைக் கண்டாய் போற்றி !
கருவான பவம்போக்கும் கழலே போற்றி !
கயிலைக் குருமணியே போற்றி ! போற்றி ! ! (1)

பண்ணின் இசையாலே பாடிப் பாடிப்
பரமனது திருவடியைப் பரவும் அன்பர்
நண்ணும் திருக்கூட்டம் கூட்டு வித்து
நாடோறும் அளிகூரும் நம்பா போற்றி !
எண்ணும் இருபானேழ் தேவத் தானம்
எழிலோங்க அரசாளும் எம்மான் போற்றி !
கண்ணின் மணியாகி நின்றாய் போற்றி !
கயிலைக் குருமணியே போற்றி ! போற்றி ! ! (2)

ஆதாரச் செயலாற்றும் கிருஷ்ண மூர்த்திப்
பிள்ளையும் பல்லவ ராயப் பேட்டைக்
கேதாரம் பிள்ளையும் காழி வாழும்
விஸ்வநாத முதலியார் முதலோர் தாமும்
பாதார விந்தத்தைப் பணிந்து வாழ்த்திப்
பண்ணாரத் தேவாரப் பாடல் பாடக்
காதாரக் கேட்டுவக்கும் கருத்தே போற்றி !
கயிலைக் குருமணியே போற்றி ! போற்றி !! (3)

வேலைக்கு வேலைவிடும் வேலன் தானே
விரும்பியுறை-செந்தில்நகர் வழியா டாற்றப்
பாலைநிகர் இன்னிசையால் பாடும் தொண்டர்
பாங்கான திருக்கூட்டம் தன்னோ டேகி
ஆலைக் கரும்பினது தெளிவே போல
அடியார்கட் கமுதமொழி அளித்தாய் போற்றி !
காலைக் கமலநிகர் கழலே போற்றி !
கயிலைக் குருமணியே போற்றி ! போற்றி !! (4)

சொன்னலத்தால் அருள்நந்தி முனிவர் போற்றும்
தூயதிருத் தாடகையீச் சரத்தைப் போற்ற
இன்றெங்கள் திருப்பனசை நகர்க்கு வந்து
இப்பெரிய திருக்கூட்டம் நீடு வாழ்க !
பொன்னொளிசேர் கயிலைமகா சன்னி தானப்
புனிதமலர்த் திருப்பாதம் போற்று கின்றோம் !
கன்னற்சா றெனஇனிக்கும் கழலே போற்றி !
கயிலைக் குருமணியே போற்றி ! போற்றி !! (5)

திருப்பனந்தாள்	T. M. சடையப் பிள்ளை, தலைவர்.
25—12—60	G. கல்யாணசுந்தரம் பிள்ளை, செயலாளர்.

EXTRACT FROM THE VISITORS' BOOK

Dharmapuram Adhinam
Velur Sri Vaithianathaswami Devasthanam,
Vaithiswarankoil.

Thanks for the Dharsan of the deities

(Sd.) S. P. Sriram
Tribunal for Disciplinary Proceedings
Madras 7—4—60

வினைச்சொற்றிறம்

முதுபெரும்புலவர்
முத்து. சு. மாணிக்கவாசக முதலியார்

(மலர் 20, இதழ் 1, பக்கம் 48 இன் தொடர்ச்சி)

'எகரம் மெய்யோடேலாது' என்றும் 'அம்மமூன் இயல்பே' என்றும் சொல்லாதிருப்பின் என்ன கெட்டுப்போம்? 'வாழிய' 'சாவ' 'அன்றி' 'இன்றி' 'பவ்வீ' 'நீ' 'மீ'; அது + அன்று ; தெங்கு + காய் இவையெல்லாம் பெரும்பான்மை யுட்படாதன என்று தள்ளிவிட்டாரோ ?

'ஆறனுருபும் ஏற்கும் அவ் வுருபே' என்றது பெரும் பான்மையதோ ? அது குற்றமாமோ? 'தெரிநிலைவினை முற்றுடு குறிப்புவினை முற்று ஒப்பப் பயின்றுவருதலின் இரண்டு தொட ராகக் கொள்ளப்பட்டது' என்றார் ஒருவர். இத்தொடரில் உள்ள குற்றம் கிடக்க. அவை ஒப்பப் பயின்று வருகின்றனவோ ? தெரிநிலைவினை முற்றுக்களின் அளவு குறிப்புவினை முற்றுக் களைக் காட்டல் இயலுமோ ? குறிப்பில் எச்சங்களின் சிறு பான்மையையாதல் முற்றுக்களின் பெரும்பான்மையையாதல் விளக்குதல் அவர்க்குக் கூடுமேல் விளக்குதல் நன்று.

நன்னூலில், குறிப்புப் பெயரெச்சங்களையும் குறிப்புவினை யெச்சங்களையும் ஒழித்துக் கூறியதற்குத் தொல்காப்பியச் சூத்திரங்கள் ஆதாரம் ஆமோ ? ஆயின், அந்த ஆதாரங்களையும் விளக்கலாமே ! தொல்காப்பியர் வினைச்சொற்றிறத்தையுணர்த் தும் முறையை நன்குணராது அதனை எழுதலாமோ ?

'தொல்காப்பியர் வேற்றுமைத் தொடர்கள் ஆறு எனக் கொண்டு அல்வழித்தொடர் இத்தனை எனக் கூறிற்றிலர்' என்றார் அவர். தொல்காப்பியர் வேற்றுமைத் தொடர்கள் ஆறு என்று யாண்டுக் கூறினர் ? வேற்றுமைத் தொடர்கள் எண் ணிறந்தனவாதலை உணர்ந்த தொல்காப்பியர் ஆறு எனக்

கூறுவாரோ? 'ஐந்தொகை மொழிமேற் பிறதொகல் அன்மொழி' என்றதால், அல்வழித்தொகை ஐந்தே எனல் பெறப்படுதல் உண்மையே. அதனால், அவ்வைந்தனுள் ஏதேனும் ஒன்று உட்பிரிவுடையதாயிருத்தல் கூடாது என்பது தவிர்க்கப்படுமோ? வேற்றுமைத் தொகையைக் கூட்டி ஐந்தொகை என்றதுதான் நியாயம். இருபெயரொட்டுப் பண்புத்தொகையைத் தனித்தொகையாகக் கொண்டு ஆறு தொகையாகக் கொண்டு 'அறுதொகை மொழிமேற் பிறதொகல் அன்மொழி' எனல் ஒல்லுமோ? இருபெயரொட்டுப் பண்புத் தொகை, பண்புத் தொகையின் வேருய்த் தனித்தொகையாகக்கொள்ள நிற்குமோ? பண்புத் தொகையை ஒன்ருகக் கொண்டவராயின், நன்னூலார்,

> 'பண்பை விளக்கும் மொழி தொக்கனவும்
> ஒருபொருட் கிருபெயர் வந்தவும் குணத்தொகை'

என்று இருபிரிவாக எண்ணும்மை கொடுத்துக் கூறியதென்னே? 'கையும் காலும்' என்று வெளிப்படக் கூறியபின்னரும் இரண்டும் ஒன்றே எனல் அறிவோ? அவ்விரண்டும் உறுப்பானமைபோல, இவ்விரண்டும் குணத்தொகையாயின. 'கையும் காலும் உறுப்பு' 'தொக்கனவும் வந்தவும் குணத்தொகை' இவ்விருவேறு தொடர்க்கும் அமைப்பில் வேறுபாடு யாதுளது? இவ்வுண்மையறியும் ஆற்றல் இல்லாதார்க்கே, 'ஆறு என்பதற்கு யாண்டும் எவ்வகைக் குறிப்பும் கிடைத்திலது' என்று எழுதத் துணிவுண்டாகும்.

மாணுக்கரிடம் பேரிரக்கம் கொண்ட பவணந்தியார் இவ்வாசிரியரிடம் பெருங்கொடுமையோ கொண்டுள்ளார்? இவர்க்கு விளங்காதுபோனல், அவர் விளங்காமற் கூறினராவரோ?

நன்னூலார் முறைவைப்பில் மாருதவர் என்பது பலரும் அறிந்த ஒன்று. "'முற்றீரெச்சம்' என்று கூறவேண்டியவர் 'ஈரெச்சமுற்று' என்று கூறியுள்ளார். இம்மாற்றத்தால் ஆம் பயன் 'நான்கு' என்று கொள்வது" என்ருர். 'முற்றீரெச்சம்' என்று (மாற்ருது) இருப்பினும், அப்பயன் கிட்டாதோ? ஈரெச்சமுற்று, முற்றீரெச்சம் என்னும் இரண்டனுள் எது முன்னது? எது பின்னது? நன்னூலில் 'ஈரெச்சமுற்று' என்றதே முதலிற் கூறியது. வைப்புமுறைக்குட்படுவது முற் கூறியதா? பிற்கூறியதா? 'ஈரெச்சம் முற்று' முறை மாற்றிக்

கூறியதாயின், அதற்கு முன்னரே அந்நன்னூலில் 'முற்றீ ரேச்சம் என்று கூறியிருத்தல்வேண்டும். அவ்வாறு இல்லையே! 152 ஆவது நூற்பாவில் 'ஈரேச்சமுற்று' என்றார். 374 ஆவது நூற்பாவில் 'முற்றீரேச்சம்' என்றார். இவ்விரண்டனுள் எது முறைவைப்பு? எது வைப்புமுறை மாற்றம்?

'ஈர்' என்னும் எண்ணடை பெயரேச்சத்திற்கும் வினை யேச்சத்திற்கும் தனித்தனி செல்லாமல் வினைமுற்றுக்குமட்டும் சேறல், குற்றம் அன்றோ?

'என ஈரேழே' என்ற நன்னூலார் கருத்திற்கு உண்மையில் 'ஈரேழ்' எவை என்று, அந்நூற்பாவின் அமைப்பை உற்று உணர்ந்து காண்பார்க்கு, இதுகாறும் உள்ள உரையனைத்தும் பொருந்தாதனவாய்ப் போம் என்பதில் ஐயம் இல்லை.

'என்றீரேழுரையே' (21)

'எனப் பன்னிருபாற்றதுவே' (57)

'என இருவகைத்தே' (58)

'என ஆறே' (68, 69, 70)

'என இருபாலாகி இயலும்' (128)

'என்று எய்திய இருமான் மூன்று' (137)

'என முப்பாற்றுயர்திணை' (262)

'என்றிருபாற்றஃறிணை' (263)

'என்றாகும் மூவகையியல்பும் எனும் முத்தகுதி' (267)

'பெயர் வினை என இரண்டாகும்' (270)

'என அத்தொகையாறும்' (362)

'எனும் நான்களவை' (368)

'எனும் நான்கிடத்தும்' (370)

'எனக் காலம் மூன்றே' (382)

'எனும் மூன்றும்' (407)

'என ஆறேகாரம்' (422)

'என எட்டோவே' (423) முதலிய எல்லா நூற்பாக்களிலும், அவற்றின் அமைப்பு,

'பகைபாவம் அச்சம் பழிஎன நான்கும்
இகவாவாம் இல்லிறப்பான் கண்'

என்புழிப்போலச் செம்பொருள்கொண்டுணரநிற்றலின், 152 இல் மாத்திரம் இடர்ப்படுதல் ஏன்? முதன்முதலில் உரையெழுதிய மயிலைநாதர் காட்டிய வழியைப் பின்பற்றிச் சென்றனர் சங்கர நமச்சிவாயர் முதலிய பலரும்; சிலரே அங்கு எதிர்த்துநோக்கினர். மயிலைநாதர் உரைத்தது :-

'ஈரேச்சம் இருமுற்று' என்று ஓதினமையின், தொழில் என்றது அத்தொகையை எனக் கொள்க.' (தொடரும்)

EXTRACT FROM THE VISITORS' BOOK

Dharmapuram Adhinam
Velur Sri Vaithianathaswami Devasthanam,
Vaithiswarankoil.

We visited this temple and worshipped Sri Selvamuthukumaraswami and other deities with great devotion. We were given all possible help and kindness, in worshipping the Almighty. The temple is kept neat and clean and attractive. We thank sincerely the management and especially the Dharmapuram Adheenam for their good and kind service to the pilgrims.

(Sd) N. Loganathan, A. M. I. E. T(Lond) J. P. E. E.
79, Venkatesapuram, Madras 23,

(Sd) M. Janakiraman B. A.
172, Stratrans Road, Madras 23,
24—10—60.

அம்பலவன் பழூர்நக்கன்

சிவநேறிச்சேல்வர், வித்துவான்,
கே. எம். வேங்கடராமையா M. A.

கோவந்தபுத்தூர், விசயமங்கை

கோவந்தபுத்தூர், கொள்ளிடத்தின் வடகரையிலுள்ள பாடல் பெற்ற சிவதலம். இதனை அப்பரும், சம்பந்தரும் பாடியுள்ளனர். கோவந்தபுத்தூர் என்பது ஊரின் பேயர் ; விசயமங்கை என்பது திருக்கோயிலின் பெயராகும். இதனை,

'கோள்ளி டக்கரை கோவந்த புத்தூரில்
வேள்வி டைக்கருள் செய்விச யமங்கை'

என்ற அப்பர் தேவாரத்தான் அறியலாம்.

ஒரு பசு சிவலிங்கத் திருமேனியின்மீது பால் சோரிந்(து அபிஷேகம் செய்)தமையால் இதற்குக் கோவந்தபுத்தூர் என்ற பேயர் எய்தியது என்பர். இது,

'கோதனம் வழிபடக் குலவு நான்மறை
வேதியர் தோழுதேழு விசய மங்கையே'

என்று ஞானசம்பந்தர் கூறியமையால் அறியப்பேறும். 'வேள் விடைக் கருள்சேய் விசயமங்கை' என்று அப்பர் கூறிய படியால் இடபதேவருக்கு அருள் சேய்த வரலாறும் இங்கு அறியப்படுவதோன்ருகும்.

இனி, விசயன் (அருச்சுனன்) வழிபட்டமையால் இத் திருக் கோயில் விசயமங்கை என்ற பேயர் எய்தியதேன்பர்.

'பாண்டு வின்மகன் பார்த்தன் பணிசெய்து
வேண்டும் நல்வரங் கோள்விச யமங்கை'

என்ற திருநாவுக்கரசர் தேவாரம் இதனை வலியுறுத்தும்.

பிரமதேயம்

'வேதியர் தொழுதெழு விசயமங்கை' என்று அப்பர் குறித்தமையின் இங்கு வேதியர்கள் பலர் வாழ்ந்திருத்தல் கூடும். இடைக்காலத்திலும் இத்தலத்தில் வேதியர் நிறைந்து வாழ்ந்திருந்தமையின் சோழர் கல்லெழுத்துக்களில் இவ்வூர் பிரமதேயமாகவே குறிக்கப்பெற்றது. 'வடகரைப் பிரமதேயம் பெரிய வானவன் மாதேவிச் சதுர்வேதிமங்கலம்' (165 of 1929) என்றமை காண்க. இச்சிலைமேல் எழுத்திலின்று இவ்வூர்க்குப் 'பெரிய வானவன் மாதேவிச் சதுர்வேதி மங்கலம்' என்ற பேயர் வழங்கிவந்தது என்றும் அறியலாம். இறைவன் விஜயமங்கலத்து மகாதேவர் எனப்பெற்றார். (164 of 1929)

கோயில் திருப்பணி செய்தவன்

இச்சிறப்பு வாய்ந்த கோயிலைக் கருங்கல் திருப்பணி செய்தவனைக் குறித்துக் கோவிந்தபுத்தூர்க் கோயிலில் பல கல்லெழுத்துக்கள் கிடைத்துள்ளன. அத்தலைவன் அம்பலவன் பழுவூர்நக்கன்' என்ற பெயருடையவன். இவன் உத்தம சோழனது 10-ம் ஆட்சியாண்டு (கி. பி. 979) முதற் கொண்டு (170 of 1929), முதலாம் இராசராசனின் 7-ம் ஆட்சியாண்டு (கி. பி. 992) வரை (160 of 1929) கல் லெழுத்துக்களில் குறிக்கப்பெற்றுள்ளான்.

சிறப்புப் பெயர்களும் பண்புகளும்

பழுவூர்நக்கன் உத்தமசோழனது பெருந்தரம்; உத்தம சோழனால் விக்கிரமசோழமாராயன்* என்ற சிறப்புப் பெயர் அளிக்கப்பெற்றவன் (164, 165 of 1929). இவன் குவளாலத்தி னின்று† போந்தவன் (166 of 1929; 291 of 1917); வேளாள குலத்தவன். பெருங்கொடையாளி. இவன் முதலாம் இராசராசசோழனது மூன்றும் ஆட்சியாண்டில் விக்கிரமசோழ

---

* இச்சிறப்புப் பெயரை அளித்தமையால், உத்தமசோழனுக்கு விக்கிரமசோழன் என்ற பெயரிருந்தமை அறியப்பெறும்.

† குவளாலம் - கோலார்.

மகாராசன் என்று குறிக்கப்பெற்றிருப்பினும், மும்முடிச்சோழப் § பெருந்தரம் என்று வழங்கப்பெற்றான். இனி இராசராசனது 7-ம் ஆட்சியாண்டில் இவன் ராசராசப்பல்லவரையன் என்று குறிக்கப்பெற்றிருக்கிறான் என்று அறியப்படுதலின், இராச ராசனும் தன் பெருந்தரத்து அதிகாரிகளில் ஒருவனான இப் பழுவூர்நக்கனுக்கு இப்பட்டம் அளித்துச் சிறப்புச் செய்தனன் என்பது தெள்ளிது.

சிவத் தொண்டுகள்

அம்பலவன் பழுவூர்நக்கன் விசயமங்கைத் திருக்கோயிலைக் கல்லால் கட்டுவித்தமையோடு ஸ்ரீவிமானத்தையும் கல்லால் கட்டுவித்து (165 of 1929), நெடுவாயில் என்ற ஊரைத் தானமாக அளித்தான். இக்கோயிலில் "நான்கு வேளை களிலும் திருவமுதுக்கு அரிசிக்கும், பொறிக்கறியமுது, நெய் யமுது, தயிரமுது, அடைக்காயமுது, சந்தனம், கற்பூரம் ஆகியவற்றுக்கும், ஆடியருளப் பாலுக்கும், ஆடைக்கும், நுந்தா விளக்கு ஐந்தினுக்கும், சிறுகாலை எட்டு - உச்சியம்போது எட்டு- இரவுக்குப் பதினான்கு சந்திவிளக்குகளுக்கும்" ‡ இந்நில வருவாய் பயன்படுத்தப்பெற்றது (175 of 1929).

இராசராசனது 3-ம்ஆட்சியாண்டில் விநயாபரணவிண்ணகர் எம்பெருமான் கோயிலில் முன்னர் உள்ள மண்டபத்தில் சபை கூடியது; இத்தலைவனிடம் இருந்து அச்சபையார் 2000 கழஞ்சு (பொன்னை) இறைகாவலாகப் * பெற்றுக்கொண்டு $1\frac{1}{4}$ வேலி நிலத்தை இறையிலியாக்கிக் கோவிலுக்கு அளித் தனர்.

---

§ மும்முடிச்சோழன் என்பது முதலாம் இராசராசனுக்கு வழங்கிய சிறப்புப் பெயர்களில் ஒன்று.

‡ தருமபுர ஆதீனப் பதிப்பு - சம்பந்தர் தேவாரம் - 3 ஆம் திருமுறை - கல்வெட்டுக்குறிப்பு - திரு. சு. வாண்டையார்.

* இறைகாவல் - பின்னால் செலுத்தவேண்டிய வரிக்காக மொத்தமாகச் செலுத்தும் பணம் - (S. I. T. I. பாகம் 3, பக்கம் 1401).

இனி, இவ்வரசனது 7-ம் ஆட்சியாண்டில் இத்தலைவன் இத்திருக்கோயிலில் கூத்தப்பெருமானையும், உமாபட்டாலகியையும் எழுந்தருள்வித்து அவர்களுக்குப் பொன் அணிகலன்களையளித்துள்ளான் என்று ஒரு கல்லெழுத்து (163 of 1929) நுவல்கின்றது.

திருவிளக்குத் திருத்தொண்டு

பரகேசரிபன்மரது * 10 ஆவது ஆண்டில் ஒரு விளக்கு எரிக்கவும் (170 of 1929), 12 ஆவது ஆண்டில் 4 விளக்குகள் எரிக்கவும் (169 of 1929) இவன் ஆடுகளைத் திருவிசயமங்கையில் அளித்துள்ளான். இவனுடையதொண்டு கூகூரிலும் நிகழ்ந்துளது. அங்கு ஒரு விளக்கு எரிக்க 90 ஆடுகளை அளித்ததாக ஒரு கல்வெட்டினின்று (291 of 1917) அறிகிறோம்.

கோயிலதிகாரியை நியமித்தல்

இவன் இராசராசசோழனது 7-ம் ஆட்சியாண்டில் வங்கிப்புரத்துச் சேட்டபோசன் வெண்ணயகிரமவித்தன் ‡ என்பானைக் கோயிலதிகாரியாக நியமித்தான் (160 of 1929). கோயில் காரியம் பார்ப்பவர்களை மேற்பார்வை செய்ய இவ்வதிகாரிக்கு உரிமை தரப்பெற்றது. அன்றியும் வேளாளர் இவனை எதிர்த்தால் வேலையினின்று நீக்கவும், பிராமணர் எதிர்த்தால் 25 கழஞ்சு பொன் தண்டம் விதிக்கவும் இவற்கு அதிகாரம் அளிக்கப்பெற்றது (ARE 1929 II 29).

---

* பரகேசரி என்று மட்டும் உள்ள கல்வெட்டுக்களிலும், பரகேசரி உத்தமசோழன் என்றுள்ள கல்லெழுத்துக்களிலும் அம்பலவன் பழுவூர்நக்கன் குறிக்கப்பெற்றுள்ளான். ஆகவே இத்தலைவனைக் குறித்துள்ள பரகேசரிவர்மனது கல்வெட்டுக்கள் உத்தமசோழன் காலத்தவை என்பது திண்ணம்.

‡ கிரமவித்தன் - வேதத்தைக் கிரமமுறையில் அத்தியயனம் செய்தவன். [கிரமமாவது முதற்பதமும் இரண்டாவது பதமும் கூறிப் பின்னர் இரண்டாவது பதமும் மூன்ருவது பதமும் கூறிப் பின்னர் மூன்ருவது பதமும் நான்காவது பதமும் கூறி இங்ஙனமே தொடர்ந்து சொல்லுவது].

பழுவூர் நக்கப்புத்தேரி

மேற்கூறியாங்கு இரண்டு பேரரசர்களால் சிறப்பிக்கப் பேற்றமையின், பழுவூர்நக்கன் சோழநாடு முழுவதும் நன்கு அறியப்பேற்றவனாக அந்நாளில் விளங்கியவனாதல் கூடும். இவன் காலத்துக்கு ஏறத்தாழ 60 ஆண்டுகளுக்குப் பிறகு (அதாவது இரண்டாம் இராசேந்திரனின் 4-ம் ஆட்சியாண்டில்) தரப்பேற்ற மணிமங்கல சபையார் சாஸனத்தில் (S. I. I, Vol III Part I No. 29) பழுவூர்நக்கப்புத்தேரி என்று ஒரேரி குறிக்கப்பேற்றுள்ளது. தோண்டைமண்டலத்து மணிமங்கலத்து இவ்வேரி இருந்ததாகக் காணப்பேறினும், இவ்வேரிக்குப் பேயர் இவன் பேயரையோட்டி யமைந்ததாகவே கோள்ளலாம்.

இவன் மனைவியர்

இவ்வதிகாரிக்கு இருமனைவியர் இருந்தனர் என்று இரண்டு கல்லேழுத்துக்களினின்றும் அறியப்பேறுகின்றது. ஒருவர் அபராஜிதன் சேய்யவாய்மணி என்பவர்; மற்றொருவர் சிங்க பன்மன்காஞ்சிஅக்கன் என்பவராவர். (அக்கன் என்றமையால் இவரே மூத்த மனைவியாதலும் கூடும்). இவ்விருவரும் விசய மங்கைக் கோயிலில் விளக்கு எரிக்க ஆடுகளை யளித்துத் தம் புகழை நிறுவியுள்ளார்கள்.

புறவுரை

நேடுவாயில் தானசாஸனத்தில் "அறம் மறவற்க; அறமல்லது துணையில்லை" என்றுள்ள அறிவுரை கவனிக்கற் பாலது. இவ்வூரில் திருத்தோண்டத்தோகையான் திருமடம் இருந்தது (மூன்றாம் இராசராசன் காலத்தில்). ஒரு கல்வேட்டுத் தோடக்கத்தில் 'வாழ்க அந்தணர்' என்ற திருப்பாடல் எழுதப்பேற்றுள்ளது.

முடிப்புரை

இத்தலைவன் உத்தமசோழன் காலத்தில் குவளாலத்தி னின்று வந்திருந்தனன் என்றதிலிருந்து ஒரு அரசியல் சேய்தி ஊகித்து அறியப்பேறுகின்றது; உத்தமசோழன் காலத்தில்

கங்கநாடு வரையில் சோழர் ஆட்சி பரவியிருந்தது என்பதே அச்செய்தியாகும். இங்ஙனம் குவளாலத்திலிருந்து சோணாட்டுக்கு வந்து, தேவாரம் பெற்ற தலத்தில் வதிந்து, சிவத்தொண்டுகள் பல புரிந்து, அந்நாள் சைவர் நெஞ்சுள் அமர்ந்து, இந்நாளில் ஆய்வாளர் சிந்தைக்கு விருந்தாய் விளங்கும் அம்பலவன் பழுவூர்நக்கனின் பெயரும் பீடும் நீடுவாழ்க ! (இவ்வூர் கல்லெழுத்துக்களுட் சிலவற்றைத் தமிழ்ப்பொழில் துணர் 7, பக்கம் 296 - 301லும், திருக்கோயிலிலும் காண்க).

EXTRACT FROM THE VISITORS' BOOK

Dharmapuram Adhinam
Velur Sri Vaithianathaswami Devasthanam,
Vaithiswarankoil.

We feel it a great boon to have had the privileged opportunity of going to see the great Lord today. The management deserves to be congratulated on the efficientness and orderliness of the temple routine. The sanctity and serene atmosphere maintained and the special attention to the worship by the ritualists has been quite satisfactory to us. May He bless the management to continue the great service of the Lord, in which we also had the opportunity of going in our own humble way. May His Holiness be blessed.

Sd. D. Ramakrishna Sastri	Sd. M. G. Balasubramaniam
Asistant Accounts Officer	Deputy General Manager
NLC Ltd. 9—10—60	NLC Ltd. 9—10—60

I consider myself fortunate to have visited this great temple, the expert management of which is bound to attract and impress one and all: all glory to His Holiness Sri Kailai Gurumahasannidhanam whose untiring efforts will permeate the entire devotional aspect of humanity.

Sd. Shankar M. V.
Western Railway, Bombay 25—10—60.

வரலாற்றுக் கற்பனை நாடகம்

"மனக்கோயில்"

வித்துவான், ம. சிவசம்பு

காட்சி 1

இடம் : இராசசிம்மனின் பூசை அறை

பாத்திரங்கள் : இராசசிம்மன் - மனைவி அரங்கபதாகை - தோழி

காட்சி அமைப்பு

[நடராசப்பெருமானின் திருவுருவம். வலப்பக்கம் கைலாச நாதர் மாதிரிக்கோயில். இடப்பக்கம் கயிலைமலையின் படம். அதனடியில் யாழ் ஒன்று இருக்கிறது. கட்டிலில் ரத்தினக் கம்பளம் விரிக்கப்பட்டிருக்கிறது. இராசசிம்மன் வழிபாடு முடித்துக் கட்டிலில் அமர்கின்றான். பணிப்பெண் யாழை எடுத்து அரசன் கையில் கொடுக்கிறாள். இராசசிம்மன் பாடு கிறான்.]

இராசசிம்மன்

இராகம் ; மோகனம்] [தாளம் : ஆதி

ஆடுகின்றிலை கூத்துடையான் கழற்கு
அன்பிலை என்புருகிப்
பாடுகின்றிலை பதைப்பதுஞ் செய்கிலை
பணிகிலை பாதமலர்
சூடுகின்றிலை சூட்டுகின் றதுமிலை
துணையிலி பிணநேஞ்சே
தேடுகின்றிலை தெருவுதோற லறிலை
செய்வதோன் றறியேனே.

[பாட்டு முடிந்தவுடன் அரங்கபதாகை ஐராவதேச்சுரர் கோவில் பிரசாதத் தட்டுடன் வருகிறாள். இராசசிம்மன் கையில் கொடுக்கிறாள். இராசசிம்மன் பிரசாதத்தை வாங்கித் திருநீறு

அணிந்து கொள்ளுகிறான். மலர்களைக் கண்களில் ஒற்றிக் கொள்ளுகிறான். அரங்கபதாகை அவனை வணங்குகிறாள்; அவளுக்குத் திருநீறு இட்டு மலர்களைக் கொடுக்கிறான்]

அரங்கபதாகை : அரசே ! தங்களின் இசையைக் கேட்டு அரண்மனையில் எல்லோரும் மெய்மறந்து நிற்கிறார்கள். நான் வந்ததைக்கூட யாரும் கவனிக்கவில்லை.

இராசசிம்மன் : போதுமே புகழ்ச்சி !

பதாகை : அரசே ! தங்கள் இசைப் பெருமையை நாடு நன்கு அறிந்திருக்கிறது. இசை உணர்ந்த புலவர்கள் தங்களை "வாத்ய வித்யாதரன்" — "வீணா நாரதன்" என்றெல்லாம் புகழ்வதைக்கண்டு என் மனம் மகிழ்ச்சி அடைகிறது.

சிம்மன் : அன்பே ! பிறர் புகழவேண்டுமே என்பதற்காக நான் பாடவில்லை. இசை உள்ளத்து உணர்ச்சிகளை இறைவனிடம் இழுத்துச் செல்லும் இயல்புடையது. பல்லவர் பரம்பரையை வாழச்செய்த நாவுக்கரசர் 'தமிழோடு இசை பாடல் மறந்தறியேன்' என்கிறார். நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பினார் ஞானசம்பந்தர். ஆனாயநாயனார் குழலூதி இன்னிசைபெருக்கி இறவாத இன்பவீடு பெற்றார். ஞானசம்பந்தப்பெருமான் பாடல்களை யாழில்இசைத்து மகிழ்ந்தார் யாழ்ப்பாணர். இறைவன் ஏழிசையாய், இசைப்பயனாய், இன்னமுதாய் என்னுடைய தோழனுமாய் இருக்கிறான்.

பதாகை : அரசே ! இன்று ஐராவதேச்சுரர் கோயிலுக்குச் சென்றிருந்தேன். இறைவனின் ஆனந்தக் கூத்தைக் கண்டேன். எல்லையில்லா மகிழ்ச்சி கொண்டேன்.

சிம்மன் : தேவி ! இக்கோயிலையும்விட மிக்க சிறப்பாகக் கைலாசநாதர் கோயிலை அமைப்பதைப்பற்றியே சிந்தித்துக் கொண்டிருக்கிறேன். (கைலாசநாதர் கோயிலைக் காட்டி) இக் கையிலாசநாதர் கோயிலைப் பார். என் உள்ளத்தில் திட்டமிடப்பட்டிருக்கும் திருக்கோயில் இது. அதோ இருக்கும் கயிலைமலையைப் பார். அம்மலையின் தோற்றம் போலவும், அதன் அளவைப்போலவும் கையிலாசநாதர் கோயிலைக் கட்டவேண்டும் என்று நினைக்கிறேன். என்

கருத்து நிறைவேறக் கயிலைநாதனை இடைவிடாது வேண்டு கிறேன். கைலாசநாதர் கோயிலை எங்கு அமைக்கலாம் என்றும் யோசிக்கிறேன்.

பதாகை : அரசே! வேண்டுவார்க்கு வேண்டுவதே ஈவானாகிய இறைவன் தங்கள் கருத்தையும் நிறைவேற்றிவைப்பான். கோயிலை எங்கு அமைப்பது என்று யோசிக்கிறீர்களா? நம் தலைநகராகிய காஞ்சியில்தான் அமைக்கவேண்டும்.

சிம்மன் : அதுவும் சரியானயோசனைதான்; சீக்கிரம் கோயிலைக் கட்டுவதற்குத் தொடங்கவேண்டும்.

பதாகை : தங்களைக் காண அமைச்சர் வெகுநேரமாகக் காத்திருக்கிறார்.

சிம்மன் : அப்படியா? வா போகலாம்.

(இருவரும் போகிறார்கள்)

காட்சி 2

இடம் : வீதி.

பாத்திரங்கள் : ஊரவர்கள், வள்ளுவன்.

ஊரவர் 1 : அண்ணே! வா அண்ணே! ஏது வெகுநாளாக ஆளையே காணோம்.

ஊரவர் 2 : தம்பி! தலயாத்திரை போய் இருந்தேன். ஊரில் ஏதாவது செய்தி உண்டா?

ஊரவர் 1 : எல்லாம் நல்ல செய்திதான். ஆனால்......?

ஊரவர் 2 : ஆனால்! என்ன தம்பி!

ஊரவர் 1 : நம் நாட்டிலே உணவுப்பொருள் விலைதான் விட்டம் போல ஏறிப்போச்சு. அரிசி கிடைக்கவில்லை, காய்கறி கிடைக்கவில்லை. ஒன்றுக்கு மூன்றுகொடுத்து உப்பு வாங்கவேண்டியிருக்கிறது.

ஊரவர் 2 : நம் நாட்டிலா! காவிரி, தென்பெண்ணை, பாலாறு முதலிய வளம்பொருந்திய ஆறுகள் ஓடுகின்ற நாட்டில் பஞ்சமா?

ஊரவர் 1 : பஞ்சம் வராமே என்ன அண்ணே செய்யும். நாட்டின் எல்லேயில் சாளுக்கியர்களும், கங்கர்களும் அடிக்கடி போர் தொடுத்துக்கிட்டே இருக்கிறார்கள். வேற்று நாட்டில் இருந்து நமக்கு வேண்டிய பொருள்கள் வாராமல் தடைசெய்கிறார்கள். எல்லேயில் உள்ள நம்நாட்டு மக்களைத் துன்புறுத்துகிறார்கள். மகேந்திர அரசன் காலம் முதல் - நாம் சாளுக்கியர்களோடும், கங்கர்களோடும், ராஷ்டிரகூடர் களோடும் போர் செய்துகொண்டே இருந்தால் நாட்டின் செல்வம் என்ன ஆகும் ?

ஊரவர் 2 : போரால் ஏற்படும் பொருள் இழப்பிற்குச் சொல்ல வேண்டுமா ?

ஊரவர் 1 : அது மட்டுமா அண்ணே ! இயற்கைக் கோளாறு வேறு. மழை பெய்யாமல் கெடுத்தது பாதி. பெய்து கெடுத்தது பாதி, எல்லாம் பேச்சு. நம் நாட்டிலே குடிக்கக் கூட நல்ல தண்ணீர் கிடையாது அண்ணே !

ஊரவர் 2 : என்ன! அப்படியா! தண்ணீருக்குக்கூடப் பஞ்சமா?

ஊரவர் 1 : பஞ்சம் இல்லே அண்ணே ! தண்ணீர் இருக்கும் நீர் நிலேகளில் எல்லாம் பகைவர்கள் நஞ்சுகலந்திருக்கிறார்கள்

ஊரவர் 2 : அரசர் இதை எல்லாம் கவனிப்பது கிடையாதா ?

ஊரவர் 1 : நல்லாச் சொன்னே ! அரசர் மட்டும் கவனிக்காமல் இருந்தால் பல்லவ நாடே பறந்துபோயிருக்கும்.

(வள்ளுவன் வருதல், முரசு அடித்தல்)

வள்ளுவன் : இதனால் பொதுமக்களுக்கு அறிவிப்பது என்ன வென்றால் நம்நாட்டு நீர்நிலேகளில் பகைவர்கள் நஞ்சைக் கலந்திருப்பதால் யாரும் தண்ணீர் எடுக்கக்கூடாது. நல்ல தண்ணீர் அரண்மனேயிலுள்ள காவல் கிணற்றிலும் ஐராவதேச்சுரர் கோயிலிலுள்ள கிணற்றிலும் எடுத்துக் கொள்ளலாம். மக்களுக்கு வேண்டிய உணவுப் பொருள் களே அரண்மனேயிலும், ஐராவதேச்சுரர் கோயிலிலும் பெற்றுக்கொள்ளலாம். பஞ்சத்தைப் போக்க நாளே அரசவைகூடி விரிவானதொரு திட்டம் வகுக்கப்போகிறது.

ஊரவர் 1 : அண்ணே ! அரசரின் அன்பைப் பார்த்தாயா ?

ஊரவர் 2 : தம்பி ! அவரை வாழ்த்தவேண்டும் தம்பி !

ஊரவர் 1 : அண்ணே ! இங்கே பக்கத்திலே வா ! (காதிற்குள் சொல்வதுபோல) பஞ்சத்தைக் காரணமாக வைச்சு சிலர் உணவைப் பதுக்கி அதிக விலைக்கு விற்கிறார்களே, அவர்களை எல்லாம் கடுமையா தண்டிச்சா என்ன அண்ணே !

ஊரவர் 2 : தம்பி ! அவர்களைக் கடவுள்தான் கேட்கணும் ! வா நாம் ஐராவதேச்சுரர் கோயிலுக்குப் போய் நல்ல தண்ணீர் குடிப்போம்.

ஊரவர் 1 : ஆபத்துக்குக் கோயில்தான் அண்ணே உதவுது. அதுதான் நமக்குப் புகலிடம். வா, போகலாம்.

(தொடரும்)

மதிப்புரை

சிவபூசை, திருக்கோயில், தமிழ்மறை வழிபாட்டுநூல்

ஈரோடு அருள்நெறித் திருக்கூட்டத்தினரின் 12 ஆவது வெளியீடு; பக்கங்கள் - 110; குன்றக்குடித் திருவண்ணாமலை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ தெய்வசிகாமணி அருணாசல தேசிக சுவாமிகள் அணிந்துரையுடன் கூடியது; விலை - 37 ந. பை.

கடந்த 15 ஆண்டுகளாக ஈரோடு சிவன் திருக்கோயிலில் கொண்டு ஒழுகிவரும் தமிழ் வழிபாட்டுமுறை இந்நூலின்கண் திறம்பெற விளக்கப்பட்டுள்ளது. இந்நூல் 5ம் பதிப்பாக வருவதொன்றே இதன் பெருமையைக் குறிப்பதாகும். திருமுறைகளினின்றும் அவ்வச் செயன்முறைக்குத்தகப் பாடல்கள் தரப்பெற்றுள்ளன. விழாக்களில் சாத்திர தோத்திரப் பாடல்கள் ஓதவும் போறுக்கி அளிக்கப்பெற்றுள்ளன. இத்திருப்பாடல்களால் இந்நூலில் கண்ட வண்ணம் வழிபாடு செய்து இருமைப் பயனும் எய்துதல் சைவர்கள் கடன். தமிழில் வழிபாடு நிகழவும் நிகழ்த்தவும் விழையும் மெய்யன்பர்களுக்கு இந்நூல் உற்ற துணையாக உதவும். ஆங்காங்குக் காணப்பெறும் எழுத்துப்பிழைகளை அடுத்த பதிப்பிலேனும் களைந்து விடுதல்வேண்டும். தமிழ் உலகு பெற்றுப் பயனுறுக.

— சோ. சிங்காரவேலன் B. A.

பழந்தமிழகத்துத் திருவிழாக்கள்

செஞ்சொற்கொண்டல்
வித்துவான். சொ. சிங்காரவேலன், B. A.

விழா :

விழா என்பது ஒரு விழுமிய தமிழ்ச்சொல். விழைவு என்றால் விருப்பம் என்று பொருள். விழைவுடன் கொண்டாடும் செயலுக்கு விழா என்று பெயர். 'கொண்டாட்டம்' என்றும் இதனைக் கூறுகிறோம். கொண்டு + ஆட்டம் என்ற இரண்டு சொற்களின் புணர்ச்சியே கொண்டாட்டம் என்று ஒரு சொல்லா யிற்று. விழா எடுக்கவேண்டும் என்ற விருப்பத்தினைக்கொண்டு ஆடியும் பாடியும் மகிழும் மக்கள் மனநிலைக்கேற்ப அமைந் திருக்கின்றது கொண்டாட்டம் என்ற இச்சொல். 'சாறு' என்ற பழஞ்சொல்லையும் விழாவினைக் குறிக்க இலக்கியங்கள் வழங்கு கின்றன. பலரும் சார்ந்து கொண்டாடுதலின் 'சார்' என்பதே இச்சொல்லாக மாறிற்றே என்றும் எண்ணலாம். தமிழ்மக்கள் கடவுளை முன்னிட்டே பல விழாக்களையும் கொண்டாடினர். அழகிய பொருளையும் தெய்வத்தன்மைவாய்ந்த பொருள்களையும் திரு என்ற சொல்லோடு சேர்த்து வழங்குவதும் தமிழர் மரபு.

தமிழ்நாட்டில் நிகழும் திருவிழாக்கள் பலப்பல. இவற்றுள் பல பண்டைக்காலந்தொட்டு நிகழ்ந்துவருவன. பல இடைக் காலத்தும் பிற்காலத்தும் நிகழத்தொடங்கிப் பின் தொடர்ந்து நடைபெறுவன. இன்று நம்நாட்டு விழாக்களை எண்ணப் புகுவோ மானால் வரம்பின்றி நீளும்; விழாவில்லாத திங்களே கிடையாது. அவ்வாறு விழாக்கள் பெருகிவிட்டன. எனவே, பண்டைக் காலத்து நிகழ்ந்த திருவிழாக்களை ஓரளவு இலக்கியங்கள் கொண்டு கண்டு முடிவுசெய்வதே இப்போது நமது சிந்தனை.

கடற்றெய்வ விழா :

தமிழ்மகன் இயற்கையைக் கடவுளாகக் கண்டு வழிபட்ட மரபினன்; காற்றை - கடலை - வானை - வளியை - கதிரை -

மதியை இவ்வாறு எல்லாவற்றையும் இறையாகக்கண்டு வழிபாடு செய்தான்.

' வளிகதிர்ச் செல்வனை வாழ்த்தவும் இயைவதோ '

என்கிறது கலி.

' வானாகி மண்ணாகி வளியாகி வெளியாகி '

என்கிறது திருவாசகம்.

' ஞாயிறு போற்றுதும் ஞாயிறு போற்றுதும் '

' திங்களைப் போற்றுதும் திங்களைப் போற்றுதும் '

என்கிறது சிலம்புச் செல்வம்.

கடலுக்குரிய தெய்வத்தை - நீர்த் தெய்வத்தை வாழ்த்தி அதற்குத் தமிழ்மக்கள் விழாவெடுத்த செய்திகை இலக்கியங்கள் சொல்கின்றன. சிலப்பதிகாரத்து இந்திரவிழவூரெடுத்த காதை-கடற் கடவுளுக்கு விழாச் செய்யும் தமிழ்ச் சமுதாயத்துப் பழக்கத்தைக் காட்டுகிறது.

' கரியமலர் நெடுங்கட் காரிகை முன்
கடற்றெய்வம் காட்டிக் காட்டி '

என்றும் கடற்றெய்வத்தைக் காட்டுகிறார் இளங்கோவடிகள். ஆதலின் தமிழ்மக்கள் கடலைத் தெய்வமாகக் கொண்டிருந்தனர் என்பது தெளிவு. இந்தத்தெய்வத்துக்கு மக்கள் விழா எடுத்துத் தாங்கள் இன்பமுடன் வாழ வேண்டிக்கொண்டார்கள்.

' வருணன் மேய பெருமணல் உலகம் '

என்று தொல்காப்பியர் சொல்வதால், அவர் கடல் தெய்வமாகக் கருதவைத்தது ' வருணனையே ' என்பது புலனும்.

கடல் நிலத்திலே வாழ்கின்ற செம்படவர்களுக்கு வலை வளம் தப்பினால், அந்தச்சாதி மகளிரெல்லாம் கிளையுடன்கூடி சுறுமீனின் கோடு நட்டுப் பரவுக்கடன் கொடுப்பர் ; இது நச்சினார்க்கினியரது கூற்றிலிருந்து நாமறியும் செய்தியாகும்.[1]

---

[1] அகத்திணை - சூ - 5 - நச்சர்.

இவ்வாறு அவர்கள் நட்டு வழிபாடு செய்யும் சுருமீனின் கோம்பிலே கடல் தேய்வம் ‘ ஆவாகனம் ’ செய்யப்படுமேன்ற கருத்தினைப் பட்டினப்பாலை அழகாகக் கூறுகிறது.

‘ சினைச் சுறவின் கோடு நட்டு
மனைச் சேர்த்திய வல்லணங்கினான் ’ [2]

பழந்தமிழ் நாட்டில் - கடைச்சங்க காலத்துக்கு முன்னால் யாண்டிநாட்டை ஆண்ட மன்னன் பல்யாகசாலைமுதுகுடுமிப் பேருவழுதி என்பான் கடல் தேய்வத்துக்கு ஒரு பேரிய விழா எடுப்பித்தான். அது பரந்து விரிந்த தமிழ்நாடு முழுதும் பாராட்டப்பட்டது. அவ்வளவு சிறப்பாக அது கோண்டாடப் பட்டது. நேட்டிமையார் என்ற ஒரு புலவர் அப்பாண்டியன் கடல்விழாவேடுத்ததைக் கவியரங்கேற்றுகிறார் :

‘ முந்நீர் விழவின் நேடியோன் ’ [3]

என்கிறது புறநானூறு.

இவற்றால், கடற்றேய்வத்துக்கு விழாவேடுப்பது பழைய வழக்கம் என்பதனை அறியலாம்.

துணங்கை விழா :

மகளிர் விழாக்காலத்தே துணங்கை ஆடுவார்கள். இக் கூத்தினை,

‘ மகளிர்தழீஇய துணங்கை ’

என்று குறுந்தோகை கூறும். [4] எனவே மகளிர் தம்முள் தழுவிக் கோண்டாடுதல் இக்கூத்து என்று கோள்ளப்படும்.

‘ வணங்கிறைப்பணைத்தோள் எல்வளைமகளிர்
துணங்கைநாளும் வந்தன ’ [5]

---

[2] பட்டினப்பாலை - 86 - 87.

[3] புறநானூறு - 9 : 10.

[4] குறுந்தோகை - 31.

[5] குறு - 364.

'முழவிமிழ்துணங்கைதூங்கும் விழாவின்'[6]

'இலங்குவளை மடமங்கையர்
துணங்கை அம்சீர் தழூஉ மறப்ப'[7]

என்றெல்லாம் இலக்கியங்கள் இவ்விழாவைப்பற்றிச் சொல்லுகின்றன. இவ்விழாவில் மகளிர்க்குச் சிறப்பிடம். ஆடவர்களுக்கும் ஓரளவு உண்டு. இவ்விழாவும் ஆங்காங்குப் பழந் தமிழ் நாட்டிற் கொண்டாடப்பட்டது.

தை விழா :

தைத்திங்களில் மக்கள் எல்லோரும் நாட்காலையில் நீராடி நோன்பு நோற்றனர். 'தை பிறந்தால் வழிபிறக்கும்' என்பது தமிழ் நாட்டுப் பழமொழி.

'வான்பெயல்நனைந்த புறத்த நோன்பியர்
தையூண் இருக்கையின் தோன்றும்'

'தைஇத்திங்கள் தண்கயம் படிந்து'

என்று இத்திங்கள் விழாவினை எடுத்துரைக்கிறது நற்றிணை.

'தையினீராடிய தவந்தலைப்படுவாயோ' (கலி - 57)

இவ்வாறு கூறுவதால் தைத்திங்களில் பழந்தமிழர் நீராடி நோற்ற நோன்புதான் பிற்காலத்தே மார்கழி மாதத்துப் பாவை நோன்பாகியது என்று தெளிவாக உணரலாம்.

இன்றும் தைத்திங்களில் நந்தமிழ்நாட்டு ஆலயங்களில் சிறப்போடு பூசனை நடைபெறுவதைக் காணத் தமிழர் தைத்திங்களிலேயே தம் புனித நீராட்டினை நிகழ்த்தி நோன்பு இருந்தனர் என்று அறியலாம்.

(தொடரும்)

[6] அகம் - 336.

[7] மதுரைக்காஞ்சி - 159 - 160.

மனைத்தக்கமாண்புடைமை

ப. வசந்தா

தொண்டர் துணைவியார் :

"இல்லதேன் இல்லவள் மாண்பானால்" என்ற அமுத வாக்கின் அருங்கலைப் பேட்டகமாக இலங்கும் நங்கையாரே சிறுத்தொண்டரது இல்லத்தின் தூண்டா விளக்கு ஆவார்.

திருவெண்காடு செய்த புண்ணியப்பயனாக அங்குத் தோன்றிய இவ்வம்மையார் "திருவெண்காட்டு நங்கையார்" என்று வழங்கப்பெற்றுத் தொண்டர்க்கு உற்ற துணைவியாராகி இல்லறம் செழிக்கச் செய்துவந்தார். பரஞ்சோதியார் - சிறுத் தொண்டராக மாறிய பிறகு "துறந்தார்ப்பேணல்" என்ற உயர்ந்த அறத்தை மிகப் போற்றிவந்தார்.

பரஞ்சோதியாராக இருந்த நிலையிலும் அவர் அறத்தி னின்றும் - கடமையினின்றும் வழுவினார் அல்லர். மன்னன் நரசிங்கப் பல்லவனுக்காக வடபுலத்து வாதாபி என்னும் தொன்னகரத்தைத் தூள் எழப் பாழாக்கிப் பன்மணியும், நிதிக் குவையும், பகட்டினமும், பரித்தொகையும் இன்னன எண்ணில கவர்ந்து இகலரசன் முன்கொணர்ந்து பணித்தார். பல்லவன் பரஞ்சோதியாரது சிவபக்தியினைக் கேள்வியுற்று வெகுமதிகள் பல கொடுத்துத் திருவெண்காட்டிலேயே இருந்து அமைதியுற்று வாழ வகைசெய்தான். அதன் பின்தான் பரஞ்சோதியார் தொண்டர்களுக்கு அடிமையாகித் தொண்டு புரிந்தார். "சிறுத் தொண்டர்" ஆனார்.

இவ்வாறு சிறுத்தொண்டராகித் தொண்டாற்றிவரும் நாளில் செஞ்சடையண்ணல் இவரையும் சோதனை செய்யத் திருவுளம் பற்றிச் சிவனடியார்வேடம் கொண்டு இல்லம் தேடிவருகின்றார். அச்சமயம் தொண்டர் இல்லத்தில் இல்லை. ஆனாலும் அவர் துணைவியார்,

'மோப்பக் குழையு மனிச்சம் முகம்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து'

என்பதை உணர்ந்து அகமும், முகமும் மலர அடியாரை வரவேற்றார். வந்த சாம்பவர் சிறுத்தொண்டர் வருமளவும் எதிரே காணும் மரநிழலில் தங்கியிருப்பதாகக் கூறிச்சென்றார். அமுதுசெய்விக்க அடியவர்களைக் காணாது அலைந்து சோர்வுடன் இல்லத்திற்கு வந்த கணவரிடம் அவர் துணைவியார் நடந்த உண்மையைக் கூறி அடியவர் வீற்றிருக்கும் திசையைச் சுட்டினார். அவர் சுட்டிய திசையில் ஓடிச்சென்று அடியவரைக் கண்டு இன்மொழிகூறி அமுதுண்ண அழைத்தார். சிவனடியாரும் எனக்குப் பிராயம் ஐந்து உள்ளவனாய் உறுப்பில் குறைபாடிலனாய், ஒரு குடிக்கொரு பிள்ளையாயும் உள்ளவனைத் தாதை அரியத் தாய்பிடித்துச் சுட்ட உணவையே கொள்வேன்" என்ற நிபந்தனையுடன் உண்ண உடன்பட்டார்.

"பண்பு மிக்க சிறுத்தொண்டர் பரிவு கண்டு பயிரவரு
நண்பு மிக்கீர் நாமுண்ணப் படுக்கும் பசுவும் நரபசுவாம்
உண்ப தஞ்சு பிராயத்து ளுறுப்பின் மறுவின் றேல்இன்னம்
புண்செய் நோவில் வேலெறிந்தாற் போலும் புகல்வ தொன்
றென்றார்".

(பெரியபுரா. சிறுத். 50)

இதைச் செவியுற்ற சிறுத்தொண்டர் களிப்புடன் கதுமென விரைந்து நங்கையிடம் சென்று என்னை யிங்குய்ய நீ பயந்தான் தன்னை அழைப்போம் யாம் என்றார். அம்மையாரும் முகமலர்ந்து "உடுக்கை யிழந்தவன் கைபோல் உதவ" முன்வந்தார். உடனே பள்ளியினின்று பாலகன் அழைத்து வரப்பட்டான். தொண்டர் தம் துணைவியாரும் புதல்வனை உச்சிமோந்து மஞ்சனமாட்டிக் கோலம் திருத்திச் சீராளனது கால்களைத் தம் மடியின் புடையடுக்கி, மைந்தன் கைகளைத் தன் கையால் பிடித்துக்கொள்ள தனிமாமகன் நகைசெய்யத் தாதையார் கருவி கொண்டு தலையரிந்தார்.

பின்புஊனைப்பதம்செய்து வெவ்வேறுகறியமுதாக்கினார்கள். உணவு தயாரித்து முடிந்ததும் சிறுத்தொண்டர் அடியவருக்கு அமுது படைத்தார். அருகிலிருந்து உண்ண உம் புதல்வனை அழையும் என்றார் அடியவர். திருவெண்காட்டு நங்கையாரும்

மனநிறைவுடன் வாயிற்புறம் செய்யமணியே சென்று சீராளா வா என்றழைக்கக் குழந்தையும்

“ பரம ரருளாற் பள்ளியினின் றோடி வருவான் போல்வந்த
தரமில் வனப்பிற் றனிப்புதல்வன் றன்னை யெடுத்துத் தழுவித்தங்
கரமுன் னணைத்துக் கணவனார் கையிற்கொடுப்பக் களிகூர்ந்தார்
புரமூன் றெரித்தார் திருத்தொண்ட ருண்ணப் பெற்றோ மெனும்
போலிவால் ”

(பெரியபுரா. சிறுத். 82)

ஓடிவந்தான்.

தொண்டரும் நங்கையாரும் செய்வதறியாது திகைத்துக் குழந்தையை எடுத்து அணைத்து உச்சிமோந்துநிற்கும்வேளையில் அடியவர் மறைந்தார். அவர்களது திகைப்பு இருமடங்காகியது. அவ்வமயம் விண்ணில் இறைவன் காட்சியளித்தான்.

“ தனிவேள் விடைமே னெடுவிசும்பிற் றலைவர் பூதகண நாதர்
முனிவரமரர் விஞ்சையர்கண் முதலாயுள்ளோர் போற்றிசைப்ப
வினிய கறியுந் திருவமுதும் அமைத்தார் காணவெழுந்தருளிப்
பணிவெண் டிங்கள் முடிதுளங்கப் பரந்த கருணை நோக்
களித்தார் ”

(பெரியபுரா. சிறுத். 85)

சிறுத்தொண்டர், மனைவியார், மகனுடன்கூட இறைவன் கழலிணை அடைந்தார்.

தன்னைக் கொண்டவன் குறிப்பறிந்து இல்லறத்தை நல்லறமாக்கிய தொண்டரின் துணைவியாரை இன்றும் அறிஞருலகம் போற்றுகின்றது.

பன்னெறி விளக்கம்

களமூர், பெருநாவலர், செ. செல்வப்ப முதலியார்

ஓத மிகச் செயு மாரிமிகப் பெய்ய லோண் சேவிக்கு
நாத மிகச் செய்யும் வேண்கலத் தைத்தட்ட னற்பொருட்குச்
சேத மிகச் செயுந் தீமனையைப் பற்றல் செப்பரிய
கேத மிகச் செயும் வாதுமுற் கூறல் கிளிமொழியே. 75

தருமையாதீன வெளியீடுகள்

வித்துவான். வி. சா. குருசாமி தேசிகர்

(மலர் 20, இதழ் 1, பக்கம் 53 இன் தொடர்ச்சி)

எண் 25. சிதம்பர செய்யுட்கோவை

இயற்றியவர்: ஸ்ரீமத். குமரகுருபர சுவாமிகள். வெளியிட்டோர்: தருமையாதீனம் 24 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் ஆணைப்படி தருமையாதீனப் புலவர், வித்துவான். திரு. வை. மு. சண்முக தேசிகர் அவர்கள் எழுதிய பதவுரை குறிப்புரைகளுடன் சீகாழி வித்வத்சிரோமணி, திரு. ப. அ. முத்துத்தாண்டவராயப் பிள்ளை அவர்களால் வெளியிடப் பெற்றது. முதற் பதிப்பு 1937.

குமரகுருபர சுவாமிகள்: இவர்கள் வரலாறு 23ஆவது வெளியீட்டின் கீழ்க் குறிக்கப்பெற்றுள்ளது. குமரகுருபர சுவாமிகள் சிதம்பரம் சென்று ஆனந்தக்கூத்தப்பெருமானை வழிபட்டபோது அருளிச்செய்ததாகும். புராணப் பிரசங்கம் கேட்டுக் கொண்டிருந்தோர் பலரும் சுவாமிகளைக் கண்டு வழிபட ஒருவர் மட்டும் இவர்களை வழிபடாதிருக்கக்கண்ட கூட்டத்தினரில் ஒருவர் அவரைப் பார்த்து நீர்மட்டும் சுவாமிகளை வழிபடாதிருந்தது ஏன் என வினவ, அவர் குமரகுருபரர் இலக்கணக்கவியா? வரகவிதானே என்றார். அதுபொழுது அவரைக் கேட்ட அறிஞர் சுவாமிகளுக்கு அதனைத் தெரிவிக்க, சுவாமிகள் தாம் வரகவியோடு இலக்கணக்கவி என்பதைத் தெரிவிக்க இந்நூலை இயற்றியருளினர் என்ற வரலாற்றுக் குறிப்பும்,

“ பூதி சாதனக் கிழமையர் சிலர்வந்து போற்றி
நீதி நூன்முதற் பலவுரைத் தீர்நிகழ் யாப்பிற்

காதி நாளுதா ரணமேலாம் பரமத மவாவு
மோதி யாமுயு மாறருள் செய்வீர்என் றுரைப்ப ''

'' காவை நேர்தர மகிழ்ந்துளம் கனிந்துபல் செய்யுட்
கோவை யாப்பியற் காட்டினி துரைத்தனர் கொடுத்தார்
மாவை வேண்டிரை வாரியை வீலங்கலை மாய்த்த
தூவை வேலுடைத் தோன்றலார் சேவடித் தொழும்பர் ''

என்பனவாய பாடல்களால் மகாவித்துவான் பிள்ளை அவர்கள் குமரகுருபரர் செய்யுட்கோவை பாடிய காரணங்களைத் தெரிவிக்கும் குறிப்பும் அறியத்தக்கன.

சிதம்பர செய்யுட்கோவை : இந்நூல் யாப்பிலக்கணத்திற்கு இலக்கியமாக அமையப்பெற்ற 84 பாடல்களை உடையது. நீதிநெறிவிளக்கத்தின் காப்புப் பாடலாயமைந்த நீரிற்குமிழி என்னும் பாடல் இந்நூலைச் சேர்ந்தது என்பர். செய்யுளிலக்கணங்கள் அனைத்திற்கும் இலக்கியம் காட்டுமாறு செய்யுட்கள் அமைந்துள்ளன.

'' பூங்கொன்றைக் கண்ணியான் பொன்மன் றிறைஞ்சிடுக
ஆங்கொன்றைக் கண்ணி யவர் ''

என்னும் மங்கலமொழி முதலில் அமைந்த பாடலோடு நூல் தொடங்குகிறது. கண், செவி, சென்னி, வாய் இவற்றைப் பெற்ற பயன் இவை என்று கூறும் பாடல் அறிவுரையாகும். பொன்மன்றம் பொன்தாமரை, அதனுள் எழுந்தருளிய செம்மேனியெம்மான் தேன். அப்பெருமானருகில் இருந்து கண்டு மகிழும் சிவகாமியம்மையாரின் கண்கள் வண்டு எனவும் உருவகம் செய்யும் அழகு போற்றத்தக்கது.

'' கனகமார் கவின்செய் மன்றில்
அனகநா டகற்கெம் அன்னை
மனைவிதாய் தங்கை மகள். ''

இப்பாடலில் அம்பிகை அம்மை மனைவி தங்கை மகளாக இருக்கின்றாள் என்பது சாத்திரமும் கற்பனையும் காண அமைந்தது.

ஆண் பெண் இருபாலார்க்கும் பொதுவாயமைந்த ஒருவர் என்னும் தமிழ்ச்சொல்லின் சிறப்பை வியந்து அர்த்தநாரீசுவர

வடிவினனாகிய பெருமானே ஒருவர் என்று குறிக்கும் பாடல் புதிய விருந்தாகும்.

" ஒருவனுக்கும் ஒருத்திக்கும் உருவொன்றலவ்
வுருவையிஃ தொருத்தன்என்கோ ஒருத்திஎன்கோ
இருவருக்கும் உரித்தாக ஒருவர்என்றோர்
இயற்சொல் இலதெனில் யான்மற்றென்சொல்கேனே "

இவ்வாறு இலக்கண இலக்கியமாக இந்நூல் தமிழ்க் கலைக் கருவூலத்தில் சிறந்த சேமநிதியாகும்.

எண் 26. திருவையாற்றுத் தல மகிமைச் சுருக்கம்

இயற்றியவர்: உடையார்பாளையம் கழக உயர்பள்ளித் தமிழாசிரியர், திருவையாறு, வித்துவான், திரு. பொன். சாமிநாத தேசிகர் அவர்கள். வெளியிட்டோர்: தருமையாதீனம் 24ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் ஆணைப்படி ஸ்ரீமத். ராமலிங்கத் தம்பிரான் சுவாமிகள் அவர்களால் வெளியிடப்பெற்றது. முதற் பதிப்பு 1937.

சாமிநாத தேசிகர்: உடையார்பாளையம் கழக உயர் பள்ளியில் தமிழாசிரியராகப் பணிபுரிந்தவர்கள். சிறந்த தமிழ்ப் புலவர் என்பதை இந்நூலின் தெளிவால் அறியலாம்.

திருவையாற்றுத் தல மகிமை: தருமையாதீனத்திற்குச் சொந்தமான திருவையாறு ஸ்ரீ அறம்வளர்த்தநாயகி சமேத ஸ்ரீ ஐயாறப்பர்சுவாமி திருக்கோயில் மகாகும்பாபிஷேக வெளியீடு இந்நூல். தென்கயிலாயமாக சமயகுரவர் நால்வர்களாலும் பாடப்பெற்ற சிறப்புடையதாய்த் திகழ்வது திருவையாறு. இத் தலத்தைப் பற்றிச் சுருக்கமாகத் தெரிவிக்கிறது இந்நூல். திருவையாற்றுச் சிறப்பு, பஞ்சநதம், ஐங்பேசுவரம், பூலோக கயிலாயம், உலோகமாதேவீச்சுரம் முதலிய பதினாறு தலைப்புக் களில் இந்நூல் எழுதப்பெற்றுள்ளது.

(தொடரும்)

சுய மதிப்பு

வித்துவான், ப. நீலா

கொடுங்கோளூர்ப்பகவதியின் திருக்கோயிலில் அன்று ஒரே கூட்டம். சந்நிதியில் நிறைந்திருந்த மக்கள் எல்லோரும் தங்கள் தங்கள் பிரார்த்தனைகளைச் செலுத்திக்கொண்டிருந்தனர். குழந்தை தொட்டுக்கிழவர் வரை யாவரும் மனநிம்மதியுடன் பகவதியை வழிபட்டு - உள்ளமுருகிநிற்கும் காட்சியைக் கண்டும் ஏனோ இராமன் நாயரின் உள்ளத்தில் சாந்தமே இல்லை. உள்ளத்தில் ஓடிக்கொண்டிருந்த சிந்தனை காரணமாக அவர் முகம் அடிக்கடி மாறுபட்டது. அவர் மனைவி பாருக்குட்டியும், குழந்தை பாஸ்கரனும் செய்வதறியாது விழித்துத் திகைத்தனர்.

பதினெட்டு மாதங்களே நிறைந்த குழந்தை மிகவும் சுறுசுறுப்பாக இருந்தான். அலைபாயும் அழகு விழிகளில் ஆண்டவனையே காணலாம். தலைநிறையச் சுருண்ட கேசங்கள். பார்த்தவரை மீண்டும் பார்க்கத்தூண்டும் வண்ணச்சிலையாக விளங்கிய குழந்தை மெள்ளத் தாயின் மடியிலிருந்து இறங்கித் தவழ்ந்து நடந்து விளையாடியது.

இவையாவும் இராமன்நாயரின் கண்களுக்கோ-அறிவிற்கோ எட்டவில்லை. அவர் உள்ளத்தில் பெரிய போராட்டம் ஒன்று நடந்துகொண்டிருந்தது. 'நீ செய்தது தவறு; உன் அன்னைக்குக் கொடுத்த வாக்கைப் பகவதியின் சந்நிதியில் நிறைவேற்று; சுயமதிப்பிற்கு இடம் இது அல்ல' என்று இடித்துரைத்த உள்மனக்குரலை அவர் சற்றும் சட்டைசெய்யவில்லை. 'சே! அப்படிச்செய்தால் இதோ இங்கே சூழ்ந்துள்ள மக்கள் என்ன எண்ணுவார்கள்? பிரபல வக்கீல் இராமன் நாயர் இன்று பிரார்த்தனையாகச் செலுத்தியது.........மேற்கொண்டு எண்ண அவரால் இயலவில்லை. பிறகு தலைநிமிர்ந்து நடக்க முடியுமா? என்னசெய்வது இப்போது?

அவர் நினைவு ஆறு ஆண்டுகளுக்கு முன்பு சென்றது. அன்று உடுக்கத்துணி - உண்ண உணவில்லாத ஒரு சாதாரண நாயர். அவர் தாய் தங்கம் தன் இறுதிக்காலத்தில் அவரிடம்

" இராமா ! எனது ஆசை கடைசிவரை நிறைவேறவே இல்லை ; இனி, என்று நான் எண்ணியது நிறைவேறுமோ ? நான் எண்ணி யது.........எனக்குப் பகவதியின் கிருபையால் பேரன் ஒருவன் பிறந்தால் பகவதிக்கு அவன் நிறையளவு சகரி மட்டை (தேங்காய்நார்) நிறுப்பதாக நேர்ந்துள்ளேன் ; ஏளனப் படுத் தாதே ! அப்பா ஏதோ என்னால் இயன்றது இதுதானே ! ஆனால் அதை என்னால்.........இனி நிறைவேற்றவே முடியாது ; இராமா! எனக்கு நிச்சயம் பேரன் பிறப்பான். நீ தப்பாமல் நேர்ச்சையை (பிரார்த்தனை) முடிப்பாயா ? ' கிழவியின் உயிர் அவரிடம் உறுதிமொழியைப் பெற்றுக்கொண்டுதான் பிரிந்தது.

இன்று ஆண்டுகள் ஆறு ஓடிவிட்டன. இராமன் நாயர் இப்பொழுது திருவனந்தபுரத்திலேயே பிரபல வக்கீல். எந்த வழக்கைத் தொட்டாலும் வெற்றி. செல்வம் அவர் மனையின் வழியைக் கேட்டுக்கொண்டுவந்தது. இந்நிலையில் அவர் பழைய நிகழ்ச்சிகளை எல்லாம் மறந்தேபோனார்.

நேற்றையதினம் திடீரென்று பாஸ்கரனுக்குக் கைகால்கள் எல்லாம் சில்லிட்டுவிட்டன. கண்கள் மேலே செருகிக்கொண் டன. அந்நிலை பயங்கரமாகத் தோன்றியது. பக்கத்துவீட்டு முதியவள் 'இது ஏதோ தெய்வக்குற்றம்தான் ; இல்லாவிட்டால் மாலை நான்கு மணிவரை விளையாடிய குழந்தைக்கு இப்பொழுது இப்படிவருவானேன்' என்று கூறிய சொற்கள் இராமன் நாயரின் இதய நரம்பைச் சுண்டி இழுத்து பழைய வாக்குறுதியை நினைவு படுத்தியது.

இதன் விளைவு - இதோ - பகவதியின் சந்நிதியில் நிற்கிறார். உண்மையான பிரார்த்தனை அவருக்கு நினைவில் இல்லையா என்ன ? ஆனால் அப்படிச் செய்ய சுயமதிப்பு - சுற்றியுள்ள கூட்டம் இடம் தருமா ! ஆரஞ்சுபழம், பேரீச்சை, தேங்காய், மாதுளை - இவை ஒன்றும் பாஸ்கரனின் எடைக்கு நிகராக வில்லையே ! என்ன செய்வது. பாருவுக்கும் கணவன் செயல் புரியவில்லை. இப்பொழுதுதான் அவள் தன்னிலை அடைந்தாள். அடைந்தவள் குழந்தையைக் காணமல் அலறத் தொடங்கி விட்டாள். பெற்ற வயிறு கலங்கியது - கைகால்கள் ஓடவில்லை. அதற்குள் கூட்டத்தில் ஒரிருகுரல் குழந்தை துலைத்தட்டருகில்

நின்று விளையாடுவதை உணர்த்தவும் - பாருவும், நாயரும் அங்கு ஓடினார்கள் - அங்கே அவர்கள் கண்ட காட்சி :

குழந்தை பாஸ்கர் பகவதிக்காக உடைத்து, உரித்துப் போட்ட தேங்காய் மட்டைகளை எல்லாம் விளையாட்டாக எடுத்துத் துலைத்தட்டொன்றில் வைத்து முடித்துவிட்டுக் - கையில் வைத்திருந்த வாழைப்பழத்தைச் சுவைத்துக்கொண்டே இன்னொரு துலைத்தட்டில் அமர்ந்திருந்தான். துலை - நடுவழாது (சீராக) நின்றிருந்தது. அப்பொழுதுதான் அங்கு வந்த எம்பிராந்திரி (குருக்கள்) இதைக் கண்டு இராமன் நாயரை அழைத்து 'ஆ ... ... நீங்கள் நேர்ச்சை - கொடுங்கோளுர் பகவதி ஊத்தப்பட்ட தெய்வமல்லே - என்டே அம்மையை ஆரும் சதிக்யாம் பாடில்யா - நிங்கள்டே வலிப்பத்தை பகவதி கிட்டே காணிக்யாம் பாடுண்டோ ? அவளோடே நேர்ச்சையைக் குட்டியைக்கொண்டு சாதிப்பிச்சு - கண்டில்லே ! பகவதியோடே அனுக்கிரகம் ஈ குட்டிக்கு நல்ல வண்ணம் இருக்கட்டே' - (இதுதான் உண்மையான பிரார்த்தனை, கொடுங்களுர் பகவதித் தாய் சக்திவாய்ந்ததெய்வம். அவளை யாரும் வஞ்சிக்கமுடியாது. உங்களுடைய மதிப்பை அவளிடம் காட்டலாமா ? அவள் குழந்தையைக் கொண்டே பிரார்த்தனையை நிறைவேற்றிக் கொண்டாள். அவளுடைய அருள் குழந்தைக்கு இருக்கட்டும்) என்று எம்பிராந்திரி கூறவும் இராமன் நாயரின் அகந்தை, சுயமதிப்பு அழிந்து அனைவரும் பாருக்குட்டியும், குழந்தை பாஸ்கரனுடன் அம்மையின் கால்களில் விழவும் சரியாக இருந்தது.

EXTRACT FROM THE VISITORS' BOOK

Dharmapuram Adhinam
Velur Sri Vaithianathaswami Devasthanam,
Vaithiswarankoil.

I have read what Sri R. V. Krishna ayyar has written above and I have great no hesitation to endorse every word of what he has written. Apart from the physical cleanliness the whole temple is prevailing with a spirtual atmosphere which has impressed me very deeply.

(Sd.) N. Panchapagesa Iyer,
Advocate Supreme Court,
Madras 27—9—60.

செய்திகள்

* *

தருமையாதீனத்தில்

ஸ்ரீ ஆனந்தபரவசர் குருபூஜை

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம் இரண்டாவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ ஆனந்தபரவசதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் குருபூஜை விழா 4—1—61 புதன் கிழமையன்று நிகழ்ந்தது. காலை 7 மணி அளவில் அபிஷேக ஆராதனைகள் நிகழ்ந்தன. மாலையிலும் அலங்கார ஆராதனைகள் சிறப்புற நிகழ்ந்தன. இருவேளைகளிலும் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் எழுந்தருளி வழிபாடாற்றினார்கள். விழா மலராக சைவநுட்டான அகவல், சிவபூஜையகவல் வெளியிடப்பட்டு அன்பர்களுக்கு வழங்கப்பட்டன.

காலை மாலை இருவேளைகளிலும் ஆதீனத் திருக்கூட்டத்து அடியவர்களாலும், ஆதீனக் கல்லூரிப் பேராசிரியர்களாலும், ஏனைய கல்வி நிலைய ஆசிரியர்களாலும் சாத்திரதோத்திரச் சொற்பொழிவுகள் நிகழ்த்தப்பெற்றன. இரவு 7 மணி முதல் வேளூர் சீகாழி ஓதுவாமூர்த்திகள் திரு. க. சொக்கலிங்கம், திரு. சா. திருஞானசம்பந்தம் இவர்களின் பண்ணிசையரங்கு நிகழ்ந்தது.

திருவெம்பாவை மாநாடுகள்

மாயூரம் குமரக்கட்டளையில் :

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்த மான மாயூரம் குமரக்கட்டளை ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி தேவஸ்தானத்தில் 30, 31—12—60, 1, 2—1—61 ஆகிய நான்குநாட்களிலும் மிக்க சிறப்புடன் நிகழ்ந்தது. 2—1—61 திங்கட்கிழமை மாலை 6-மணிக்குத் திருமுறைகள் யானைமேல் ஒப்பனைசெய்யப்பெற்று திருவீதியுலாவாகக் கொணரப்பெற்றன.

அவ்வமயம் ஆதீன ஓதுவாமூர்த்திகளாலும், ஆதீனத் தேவாரப் பாடசாலை மாணவர்களாலும் திருமுறைகள் பண்ணிசையுடன் ஓதப்பெற்றன. திருமுறை வீதியுலாவின்போது நான்கு வீதி களிலும் ஆதீனத் தேவாரப் பாடசாலை ஆசிரியர் திரு. R. வேலாயுத ஓதுவாமூர்த்திகளால் திருமுறைப்பாடல்களுக்கு விளக்கங்கள் கூறப்பட்டன. அன்பர்கள் பலர் வீதியுலாவில் கலந்துகொண்டனர். மக்கள் பக்தியுடன் ஆங்காங்கும் தேங்காய் பழம் முதலியவற்றுடன் வந்து வழிபாடு நிகழ்த்தினர். பண்ணிசைவாணர்களுக்குப் பால், பழம், கற்கண்டு முதலியன அன்பர்களால் வழங்கப்பட்டன.

30—12—60 வெள்ளிக்கிழமையன்று மாலை 6-மணிக்கு குமரக்கட்டளை அலங்கார மண்டபத்தில் மாயூரம் சபார்டினேட் ஜட்ஜ், திரு. S. ஹரிஹர அய்யர் B. A., B. L., அவர்கள் மாநாட்டைத் திறந்துவைத்தார்கள். மாயூரம் கௌரவ மாஜிஸ்ட் ரேட் திரு. B. திருஞானம் பிள்ளை B. A., B. L., அவர்கள் தலைமையில் மாநாடு நிகழ்ந்தது. திருவாளர்கள், மாயூரம் K. கிருஷ்ணமூர்த்தி பிள்ளை, மாயூரம் வித்துவான், சுந்தரேசம் பிள்ளை, வித்துவான், வி. சா. குருசாமி தேசிகர், வித்துவான், சா. ஞானப்பிரகாசம் முதலியவர்கள் திருவெம்பாவைப் பாடல் களுக்கு விளக்கம் கூறினார்கள்.

31—12—60 சனிக்கிழமை மாலை 6 மணிக்கு மாயூரம் நகரமன்றத் தலைவர் திரு. M. S. கிருஷ்ணமூர்த்தி அய்யர் B. A., B. L., அவர்கள் தலைமையில் மாநாடு நிகழ்ந்தது. வித்துவான், ஸ்ரீமத். மகாலிங்கத் தம்பிரான் சுவாமிகள், திருவாளர்களான மாயூரம், G. சுந்தரேசம் பிள்ளை, மாயூரம் வித்துவான், ஆ. இராமபத்திரன், செஞ்சோற்கோண்டல், வித்துவான், சோ. சிங்காரவேலன் B. A., வித்துவான், சிரோமணி, வி. சபேசன் முதலியவர்களும் திருவெம்பாவைப் பாடல்களுக்கு விளக்கம் கூறினார்கள்.

1—1—61 ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணிக்கு மாயூரம் சிவநேசச்செல்வர் திரு. V. இராமநாத அய்யர் B. A., அவர்கள் தலைமையில் மாநாடு நிகழ்ந்தது. வித்துவான், ஸ்ரீமத். இராமலிங்கத் தம்பிரான் சுவாமிகள், திரு. S. சிவராஜப்ப முதலியார் B.A., L.T., ஆகியோர் திருவெம்பாவைக்கருத்துக்களை விளங்க எடுத்துரைத்தனர்.

2—1—61 திங்கட்கிழமையன்று மாயூரம், சிவார்ச்சனைச் செல்வர் திரு. T. S. தியாகராஜ அய்யர் வித்துவான், திரு. ம. சிவசம்பு முதலியவர்களும் திருவெம்பாவை, திருப்பள்ளியெழுச்சி முதலிய பாடல்களுக்கு விளக்கம் கூறினார்கள். நாள்தோறும் அன்பர்கள் வந்து கேட்டு மகிழ்ந்தனர். மாநாட்டுத் தோடக் கத்தில் ஆதீனத் தேவாரப் பாடசாலை மாணவர்களால் திருவெம் பாவைப் பாடல்கள் பண்ணிசையுடன் ஓதப்பெற்றன.

திருவையாற்றில் :

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்த மான திருவையாறு ஸ்ரீ பஞ்சநதீசுவரசுவாமி தேவஸ்தானத்தில் 1—1—61 அன்று திருவெம்பாவை மாநாடு நிகழ்ந்தது. அன்று மாலை 6 மணிக்குத் திருமுறைகளை யானைமேல் ஒப்பனை செய்து திருக்கோயிலை வலமாகக் கொணர்ந்து ஸ்ரீ தண்டா யுதபாணிசுவாமி கோயில் மண்டபத்தில் எழுந்தருள்வித்தனர். அங்கு மாநாட்டிற் கலந்துகொள்ள அன்பர்கள் பலர் குழுமி யிருந்தனர். தேவார வகுப்பு மாணவர்கள் பண்ணிசையுடன் திருவெம்பாவைப் பாடல்களைப்பாடினர். கட்டளை விசாரணை ஸ்ரீமத். விசுவலிங்கத் தம்பிரான் சுவாமிகள் மாநாட்டைத் தொடங்கிவைத்தார்கள். திருவாளர்கள் புலவர், வி. அ. அரங்க சாமி, வித்துவான், சோ. முத்தையா தேசிகர், வித்துவான், வி. சா. குருசாமி தேசிகர், வித்துவான், சிரோமணி, வி. சபேசன், ஜி. தனவேலர் ஆகியோர் மாநாட்டில் கலந்து கொண்டு திருவெம்பாவைச் சொற்பொழிவுகள் ஆற்றினர். நன்றியுரைக்குப் பின்னர் கடவுள் வாழ்த்துடன் மாநாடு இனிது நிறைவெய்தியது.

உத்தர மாயூரம், வள்ளலார்கோயிலில் :

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்துக்குச் சொந்த மான உத்தர மாயூரம், வள்ளலார்கோயில் ஸ்ரீ வதான்யேஸ்வர சுவாமி தேவஸ்தானம் பிரசங்க சபாமண்டபத்தில் 29—12—60 வியாழக்கிழமை மாலை 6 மணிக்குத் திருவெம்பாவைச் சொற் பொழிவுகள் நடைபெற்றன. அவ்வமயம் ஆதீனத் தேவாரப் பாடசாலை மாணவர்களால் திருவெம்பாவைப் பாடல்கள் ஓதப் பெற்றன. அன்பர்கள் கேட்டு மகிழ்ந்தனர், தருமையாதீனக்

கல்வி நிலைய ஆசிரியர்களான திருவாளர்கள் முதுப்பெரும் புலவர், வித்துவான், முத்து. சு. மாணிக்கவாசக முதலியார், வித்துவான், வி. சா. குருசாமி தேசிகர் சிரோமணி, வித்துவான் வி. சபேசன் ஆகியவர்களால் திருவெம்பாவைப் பாடல்களுக்கு விளக்கங்கள் கூறப்பட்டன.

கருங்குயில்நாதன்பேட்டையில் :

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்துக்குச் சொந்தமான கருங்குயில்நாதன்பேட்டை ஸ்ரீ சக்திபுரீசுவரசுவாமி தேவஸ்தானம் பிரசங்க சபா மண்டபத்தில் 24—12—60 சனிக்கிழமை மாலை 6 மணிக்குத் திருவெம்பாவைச் சொற்பொழிவு நடைபெற்றது. அவ்வமயம் ஆதீனத் தேவாரப் பாடசாலை மாணவர்கள் திருவெம்பாவைப் பாடல்களை ஓதினார்கள். தருமையாதீனக் கல்லூரித் தமிழ்ப்பேராசிரியர் வித்துவான், திரு. சோ. சிங்காரவேலன் B. A. அவர்கள் "திருவெம்பாவையும் - திருப்பள்ளியெழுச்சியும்" என்ற தலைப்பில் சொற்பொழிவாற்றினார்கள். பலர் கேட்டு உய்ந்தனர்.

திருப்பறியலூரில் :

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்துக்குச் சொந்தமான திருப்பறியலூர் ஸ்ரீ வீரட்டேசுவரசுவாமி தேவஸ்தானம் பிரசங்க சபா மண்டபத்தில் 24—12—60 சனிக்கிழமை மாலை 6 மணிக்குத் திருவெம்பாவைச் சொற்பொழிவு நடைபெற்றது. அவ்வமயம் ஆதீனத் தேவாரப் பாடசாலை மாணவர்கள் திருவெம்பாவைப் பாடல்களைப் பண்ணிசையுடன் ஓதினார்கள். தருமையாதீன உயர்நிலைப்பள்ளித் தலைமையாசிரியர், திரு. S. சிவராஜப்ப முதலியார் B. A., L. T., அவர்கள் "திருவெம்பாவை" என்னும் தலைப்பில் பேசினார்கள். அன்பர்கள் பலர் கேட்டு மகிழ்ந்தனர்.

திருமுல்லைவாசலில் :

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்துக்குச் சொந்தமான திருமுல்லைவாசல் ஸ்ரீ முல்லைவனநாதசுவாமி தேவஸ்தானம் பிரசங்க சபா மண்டபத்தில் 25—12—60 ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணிக்குத் திருவெம்பாவைச் சொற்பொழிவு

நடைபெற்றது. அவ்வமயம் ஆதீனத் தேவாரப் பாடசாலை மாணவர்களால் திருவெம்பாவைப் பாடல்கள் ஓதப்பெற்றன. தருமையாதீனக் கல்லூரித் தமிழ்ப்பேராசிரியர், வித்துவான், சிரோமணி திரு. வி. சபேசன் ''மார்கழி நோன்பு'' என்ற தலைப்பில் சொற்பொழிவாற்றினார்கள். அன்பர்கள் பலர் கேட்டு மகிழ்ந்தனர்.

மாயூரம் ஸ்ரீ காசி விசுவநாதசுவாமிகோயிலில் :

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்துக்குச் சொந்த மான மாயூரம் ஸ்ரீ காசி விசுவநாதசுவாமி தேவஸ்தானத்தில் 25—12—60 ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணிக்குத் திருவெம் பாவைச் சொற்பொழிவுகள் நடைபெற்றன. அவ்வமயம் ஆதீனத் தேவார பாடசாலை மாணவர்கள் திருவெம்பாவைப் பாடல்களைப் பண்ணிசையுடன் ஓதினார்கள். திருவாளர்கள் வித்துவான், சொ. சிங்காரவேலன் B. A., ; வித்துவான், சா. ஞானப்பிரகாசம் ஆகியோர் திருவெம்பாவைப் பாடல்களுக்கு விளக்கம் கூற அன்பர்கள் பலர் கேட்டு இன்புற்றனர்.

குத்தாலத்தில் :

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்துக்குச் சொந்த மான குத்தாலம் ஸ்ரீ உக்தவேதீசுவரசுவாமி தேவஸ்தானம் பிரசங்க சபா மண்டபத்தில் 27—12—60 செவ்வாய்க்கிழமை மாலை 6 மணிக்குத் திருவெம்பாவைச் சொற்பொழிவு நடை பெற்றது. அவ்வமயம் ஆதீனத் தேவார பாடசாலை மாணவர் களால் திருவெம்பாவைப் பாடல்கள் ஓதப்பெற்றன. தருமை யாதீனக் கல்லூரித் தமிழ்ப்பேராசிரியர் வித்துவான், திரு. ம. சிவசம்பு ''திருவெம்பாவையும் - திருப்பள்ளியெழுச்சியும்'' என்ற தலைப்பில் சொற்பொழிவாற்றினார்கள். அன்பர்கள் வந்து கேட்டு மகிழ்ந்தனர்.

பேரளத்தில் :

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்துக்குச் சொந்த மான பேரளம் ஸ்ரீ சுயம்புநாதசுவாமி தேவஸ்தானம் பிரசங்க சபா மண்டபத்தில் 28—12—60 புதன்கிழமை மாலை 6 மணிக்குத் திருவெம்பாவைச் சொற்பொழிவு நடைபெற்றது.

அவ்வமயம் திருவெம்பாவைப் பாடல்கள் ஓதப்பெற்றன. தருமையாதீனக் கல்லூரித் தமிழ்ப்பேராசிரியர் வித்துவான், திரு. வி. சா. குருசாமி தேசிகர் "திருவெம்பாவையும் - திருப்பள்ளியெழுச்சியும்" என்ற தலைப்பில் சொற்பொழி வாற்றினார்கள். பலர் கேட்டு மகிழ்ந்தனர்.

விளநகரில் :

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்துக்குச் சொந்த மான விளநகர் ஸ்ரீ துறைகாட்டும்வள்ளலார்சுவாமி தேவஸ் தானம் பிரசங்க சபா மண்டபத்தில் 30—12—60 வெள்ளிக் கிழமை மாலை 6 மணிக்குத் திருவெம்பாவைச் சொற்பொழிவு நடைபெற்றது. ஆதீனத் தேவாரப் பாடசாலை மாணவர்களால் திருவெம்பாவைப்பாடல்கள் ஓதப்பெற்றன. தருமையாதீனக் கல்லூரித் தமிழ்ப்பேராசிரியர் வித்துவான், சிரோமணி, திரு. வி. சபேசன் "மார்கழி நோன்பு" என்ற தலைப்பில் சொற் பொழிவாற்றினார்கள். அன்பர்கள் பலர் வந்து கேட்டு மகிழ்ந் தார்கள்.

திருச்சி மலைக்கோட்டை மௌன மடத்தில் :

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்த மான திருச்சி, மலைக்கோட்டை மௌன மடத்தின் சார்பில் ஸ்ரீ தாயுமானசுவாமி தேவஸ்தானம் பிரசங்கசபா மண்டபத்தில் 31—12—60 சனிக்கிழமை மாலை மேணிக்குத் திருவெம்பாவை மாநாடு நடைபெற்றது. திருச்சி, திருக்குறள்வேள், திரு. ஜி. வரதராஜ பிள்ளை B. A., அவர்கள் 'திருவெம்பாவை' என்ற தலைப்பிலும், முதுபெரும் புலவர், வித்துவான், திரு. முத்து. சு. மாணிக்கவாசக முதலியார் அவர்கள் 'திருப்பள்ளியெழுச்சி' என்ற தலைப்பிலும் சொற்பொழிவாற்றினார்கள்.

திருக்கற்குடியில் :

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்துக்குச் சொந்த மான உய்யக்கொண்டான் என வழங்கும் கற்குடி ஸ்ரீ உஜ்ஜீவன நாதசுவாமி தேவஸ்தானத்தில் 1—1—61 ஞாயிற்றுக்கிழமை திருவெம்பாவைச் சொற்பொழிவு மாலை 6 மணிக்குத் தொடங்கி

பிரசார சபா மண்டபத்தில் நடைபெற்றது. திருச்சி பொன்னையா உயர்பள்ளித் தமிழாசிரியர், திருமுறைக் கலைஞர், வித்துவான், திரு. தி. பட்டுச்சாமி ஓதுவார் 'மார்கழி நீராடல்' என்னும் தலைப்பில் சொற்பொழிவாற்றினார்கள். அன்பர்கள் பலர் கேட்டு மகிழ்ந்தனர்.

மணக்குடியில் :

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்துக்குச் சொந்தமான மணக்குடி ஸ்ரீ சுந்தரேஸ்வரசுவாமி தேவஸ்தானத்தில் 2—1—61 திங்கட்கிழமை காலை 10 மணிக்குத் திருவெம்பாவைச் சொற்பொழிவு நடைபெற்றது. அவ்வமயம் ஆதீனத் தேவார பாடசாலை மாணவர்களால் திருவெம்பாவைப் பாடல்கள் ஓதப்பெற்றன. தருமையாதீனக் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் வித்துவான், திரு. ம. சிவசம்பு 'திருவெம்பாவையும் - திருப்பள்ளியெழுச்சியும்' என்றதலைப்பில் சொற்பொழிவாற்றினார்கள். அன்பர்கள் பலர் கேட்டு இன்புற்றனர்.

வேளூரில் :

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்தமான வேளூர் ஸ்ரீ வைத்தியநாதசுவாமி தேவஸ்தானத்தில் 5—1—61 வியாழக்கிழமையன்று திருவெம்பாவை மாநாடு நிகழ்ந்தது. கட்டளை விசாரணை ஸ்ரீமத் சொக்கலிங்கத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் மாநாட்டைத் தொடங்கிவைத்தார்கள். தேவஸ்தான ஓதுவாமூர்த்திகள் திரு. க. சொக்கலிங்கம் அவர்கள் திருவெம்பாவைப் பாடல்களைப் பாடினார்கள். திருவாளர்கள் வித்துவான், G. சுப்பிரமணிய பிள்ளை M.A.,B.L., வித்துவான், சே. வேங்கடராமச் செட்டியார், செஞ்சொற் கொண்டல், வித்துவான், சோ. சிங்காரவேலன் B. A., வித்துவான், சிரோமணி. வி. சபேசன், வித்துவான், ம. சிவசம்பு ஆகியோர் திருவெம்பாவைச் சொற்பொழிவுகளாற்றினார்கள். அன்பர்கள் பலர் வந்து கேட்டு மகிழ்ந்தனர்.

ஆச்சாள்புரத்தில் :

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்துக்குச் சொந்தமான ஆச்சாள்புரம் ஸ்ரீ சிவலோகத்தியாகராஜசுவாமி தேவஸ்தானம் பிரசங்கசபாமண்டபத்தில் 7—1—61 சனிக்கிழமை மாலை 6 மணிக்குத் திருவெம்பாவைச் சொற்பொழிவு நடைபெற்றது.

தருமையாதீனக் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர், வித்துவான், திரு. வி. சா. குருசாமிதேசிகர் 'திருவெம்பாவையும்-திருப்பள்ளி யெழுச்சியும் என்ற தலைப்பில் சொற்பொழிவாற்றினார்கள். அன்பர்கள் பலர் வந்து கேட்டு மகிழ்ந்தனர்.

சென்னை, தருமபுர ஆதீன சமயப் பிரசார நிலையத்தில்

திருக்கடவூர் கார்த்திகைச் சோமவாரப் பிரசாதம் வழங்கும் விழாவும் தருமையாதீனப் புலவருக்குப் பாராட்டு விழாவும்

சென்னைத் தியாகராயநகரில் உள்ள தருமபுர ஆதீன மடாலய தேவாலய சமயப் பிரசார நிலையத்தில், 22—11—60 மாலை 7 மணிக்குத் திருக்கடவூர் ஸ்ரீ அமிர்தகடேசப்பெருமானுக்கு கார்த்திகை முதல் சோமவாரத்தன்று 1008 சங்கம் கொண்டு அபிஷேகித்த தீர்த்தமும், விபூதிப் பிரசாதமும் திருக்கடவூர் தேவார பாராயணமும், பிரார்த்தனையும் நிகழ்த்தி அன்பர்கட்கு வழங்கப்பட்டன. மேற்படி விழாவிற்குத் தலைமை வகித்த திரு. ச. சச்சிதானந்தம் பிள்ளை அவர்கள் திருக்கடவூர் கால சம்காரமூர்த்தியின் பெருமைகளைப் பற்றிப் பேசிய பின்னர், திருக்கடவூரில் நடைபெறும் எல்லாக் கார்த்திகை சோமவாரத் தின் அருட்பிரசாதங்களையும் மறுதினம் சென்னையில் அன்பர் கட்கு வழங்கும்படி தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகா சந்நிதானம் அவர்கள் ஏற்பாடுசெய்திருப்பது சென்னைவாசிகளின் பெரும் பாக்கியம் என்றும் எல்லோரும் இப்படிப்பட்ட விழாக் களில் கலந்துகொண்டு பயனடைய வேண்டுமென்றும் கூறி னார்கள்.

பின்பு மலேயா சென்று திரும்பிய தருமையாதீனப் புலவர், பாலகவி, வயிநாகரம், திரு. வே. இராமநாதஞ் செட்டியார் அவர் கட்குப் பாராட்டு விழாவும் நடைபெற்றது. திரு. ச. சிவகுமாரன் M. A., புலவர், திரு. என். ஆர். முருகவேள் M. A., M. O. L. திருவாசகமணி, திரு. கே. எம். பாலசுப்பிரமணியம் B. A., B. L., அவர்கள் பாராட்டிப்பேசினார்கள். பாராட்டுக்குப்பதிலளிக்கையில் தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானத்தின் அருள் ஆசியினால் வெளிநாட்டு சைவசமயத் தொண்டு யாத்திரை இனி தாக நடைபெற்றது என்றும் மனமார்ந்த நன்றி கலந்த வணக் கத்தைத் தெரிவித்துக்கொள்வதாகவும் கூறி, சுமார் எட்டுமாத காலம் மலேயா, சைகோன், சிங்கப்பூர் முதலிய இடங்களில்

எண்பத்தைந்து சமயச் சொற்பொழிவுகள் நிகழ்த்தியதாகவும், சுமார் நூறு அன்பர்கட்குச் சமய தீக்ஷையும், சிவபூஜையும் செய்து வைத்ததாகவும், நம்நாட்டில் காணப்படும் கோயில்களை விட மிகப் பெரிய கோயில்கள் நிரம்ப காணப்படுகின்றன என்றும், நூற்றெட்டு கர்ப்பக்கிரகம் கொண்ட கோயில் ஒன்று இருப்பதாகவும் கூறினார்கள். யாத்திரையில் கண்டவற்றைக் குறிப்பும் புகைப்படமும் எடுத்து வைத்திருப்பதாயும் பின்பு புத்தக வடிவில் வெளியிடயிருப்பதாகவும் கூறினார்கள். கடவுள் வாழ்த்துடன் விழா இனிது முடிவுற்றது.

ஏழாவதாண்டு நிறைவு விழா

சென்னை, தருமபுர ஆதீன மடாலய தேவாலய சமப் பிரசார நிலையத்தின் ஏழாவதாண்டு நிறைவு விழா 30—12—60 மாலை நிலையத்தில் சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி கனம். S. கணபதியாப் பிள்ளை அவர்கள் தலைமையில் சிறப்பாகக் கொண்டாடப்பெற்றது. ஆண்டு விழாவை முன்னிட்டு நிலைய முகப்பு மின் விளக்குகளாலும் தோரணங்களாலும் தேர்ச்சீலை களாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தது. விழாவின் முதல் அங்க மாக வைத்தீசுவரன்கோயில் கிருத்திகைப் பிரசாதம் வழங்கும் விழா நடைபெற்றது. நிலையத்திருமுறை வகுப்பு ஆசிரியர் திரு. P. சுவாமிநாதன் அவர்கள் கடவுள் வணக்கமாக வைத்தீஸ்வரன்கோயில் தேவாரத் திருமுறைகளை இசையோடு ஓதினர். ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் அனை வரையும் வரவேற்றுப்பேசி விழாத்தலைவருக்கு ஒரு வரவேற்புப் பத்திரம் வாசித்தளித்து ஆண்டுஅறிக்கையையும் வாசித்தார்கள். நிலைய மாணவியர் இருவர் திருமுறைகளைப் பற்றி அரிய தோர் உரையாடல் நிகழ்த்தினர். தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம், மதுரைத் திருஞானசம்பந்தர் ஆதீனம், திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்ததிபர் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகள், இராஜாஜி, சென்னை கவர்னர் விஷ்ணுராம்மேதி, கேரளா கவர்னர் வி. வி. கிரி, டாக்டர் பா. நடராஜன் கலா க்ஷேத்திரம் ருக்மணிதேவி முதலியவர்கள் விழாவிற்கு அனுப்பி யிருந்த வாழ்த்துச்செய்திகளைத் திரு. சிவகுமாரன் வாசித்தார்கள். முத்து. கண்ணப்பர் M. L. C. தருமையாதீனமும், பிரசார நிலையமும் ஆற்றிவரும் பணிகளைப்பற்றிப் பாராட்டிப்பேசினார்கள்.

பிறகு ஆண்டு விழாத்தலைவர் நீதிபதி திரு. S. கணபதியாப் பிள்ளை அவர்கள் தலைமையுரை நிகழ்த்தினார்கள். வித்துவான், ஸ்ரீமத். சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் அனைவருக்கும் நன்றி தெரிவித்தார்கள். பிறகு எல்லோருக்கும் வைத்தீஸ்வரன் கோயில் கிருத்திகைப் பிரசாதம் வழங்கப்பட்டது. சுவாமிநாதன் கடவுள் வாழ்த்துப் பாடலுடன் விழா நிறைவுற்றது.

தலைவர் அவர்களின் தலைமையுரை

1. சைவ மடாலயங்களை நிறுவிய சான்றோர்கள் ஜீவன் முக்தர்கள்; தங்களுடைய ஆன்ம இலாபத்தைக்கருதி பணி செய்தவர்களல்ல. தாங்கள் பெற்ற சிவானுபவத்தை ஓரளவு எல்லா மக்களும் பெறவேண்டும் என்ற உயரிய நோக்கத் துடனேயே மடாலயங்களை நிறுவினார்கள்.

2. சமயத்தொண்டு என்று இக்காலம் நாம் கூறுவதே மடாலயங்கள் மேற்கொண்டபணி. தருமபுர ஆதீனம் பல்வேறு வகைகளில் அப்பணியை ஆற்றுவது போற்றத் தகுந்த ஓர் அம்சம். அக்காலந்தொட்டே தருமபுர ஆதீனத்தை ஞான மடம் என்று வழங்குவது ஓர் மரபு.

3. ஞான மடம் என்று அழைக்கப்படுவதற்கு இரு அம்சங்கள் தேவை. ஒன்று இம் மடத்தில் குருமகாசந்நிதான மாக வீற்றிருந்த பெரியோர்கள் கல்வி கேள்விகளாலும், அருந்தவத்தாலும் ஞானிகள் என்ற பெயர் பெறுவதற்கு இலக்காக இருந்தார்கள். தற்போழுது 25 ஆவது குருமகா சந்நிதானமாக வீற்றிருக்கும் பெரியாரும் அம்மரபைச் சேர்ந்த வர்களே. குறிப்பாக இதுவரையும் ஒரு மகாசந்நிதானமாவது கைலை யாத்திரை செய்து திருக்கயிலாய தேவனைத் தரிசித்தவர் கள் இல்லை. அப்பேறும், தற்போழுது தருமையாதீன முதற் குரவர் ஸ்ரீ குருஞானசம்பந்த தேசிக பரமாசாரியசுவாமிகளுக்கே கிட்டிற்று.

4. ஞான மடம் என்று அழைக்கப்படுவதற்கு இரண் டாவது காரணம் சைவ சமயப் பரப்பிற்கும், சைவசமய நூல் களின் அறிவைப் போதுமக்களிடம் பரப்புவதிலும் தருமபுர ஆதீனகர்த்தர்கள் எடுத்துக்கொண்ட விசேட நடவடிக்கைகளே.

5. இம்மரபிற்கு ஏற்ப 25 ஆவது குருமகாசந்நிதானம் செய்திருக்கும் பணியை இங்குக் குறிப்பிடுகின்றேன். ஞான சம்பந்தம் என்ற அரியதோர் சஞ்சிகை வெளியிடுவதுடன் 473 க்கு மேற்பட்ட அரிய நூல்களைச் சமய அறிவு வளரும் பொருட்டு அழகாக அச்சிட்டு அடக்க விலைக்குக் கொடுத்து வருவது குறிப்பிடத்தக்கது. சமயப் பிரசாரத்தில் பலவகைப் பட்ட முறைகளில் இந்த ஆதீனம் சேவை செய்து வருகின்றது. ஒன்று சமய மகாநாடுகள் கூட்டி அறிஞர்களைக்கொண்டு சொற்பொழிவுகள் நிகழ்த்துதல். இரண்டு பிரசாரகர்களைப் பேட்டைகளுக்கும், சேரிகளுக்கும் அனுப்பிவைத்து சைவசமய உண்மைகளைப் பாமரமக்களும் அறிந்துகொள்ளும்படி செய்தல். மூன்று ஆகமபாடசாலை ஏற்படுத்தித் திருமேனி தீண்டுவோருக்கு சாத்திரக் கல்வியும், ஆகமக் கல்வியும் பயிற்றுவித்தல் நான்கு தமிழ் மறை ஓதும் ஓதுவார்களுக்குத் தக்க பயிற்சி அளிக்கக் கல்வி நிலையங்கள் நிறுவியது. ஐந்து ஆங்காங்கே கோயில்களிலும் மடாலயங்களிலும் சிறுவர் சிறுமியர் தேவாரம் ஓதிப் பயன் பெறத் தேவார பாடசாலைகள் நிறுவி இருப்பது இன்னும் பல திறப்பட்ட பணிகளால் சைவ சமயத்திற்குத் தருமை ஆதீனம் செய்யும் பணி போற்றத்தக்கது.

6. அப்பணியின் ஓர் அம்சமே இன்று நாம் கூடி இருக்கும் வேளூர் தேவஸ்தான இறைபணி மன்றம். நான் மேற்கூறிய சமயப்பணியெல்லாம் ஒருங்கே சேர்ந்து இம் மன்றத்தின் மூலம் நடைபெறுவது குறிப்பிடத்தக்கது.

7. சைவ சமயமே சமயத்துளேல்லாம் சிறந்தது என்ற மனப்பான்மையுடன் ஒருசாரார் சமய சேவை செய்கின்றார்கள். எனக்குத் தெரிந்த அளவில் அத்தகைய நோக்கத்துடன் செய்யும்பணி முழுப்பயன் தராது. சித்தாந்தவாதிகள் சைவ சித்தாந்தத்தின் பெருமையை உலகம் அறியவேண்டும் என்ற தூய நோக்குடன் பிரசாரம் செய்வது வேண்டுவதே. அதை நான் இங்குக் குறிப்பிடவில்லை. அத்தகைய பேரறிஞர்களைப் போற்றி ஊக்குவித்துச் சைவ சித்தாந்த சாஸ்திரம் ஓர் ஒப்பற்ற சித்தாந்தம் என்ற உண்மையை அறிஞர்களுக்கு எடுத்துரைப்பது நல்லதுதான். ஓரளவு அவசியமும்தான். ஆனால் நம் நாட்டில் வாழும் பாமரமக்களுக்குப் பெயரளவில் தாங்கள் சைவர்கள் என்று சொல்லிக்கொள்ளும் பெரும்பாலான

மக்களுக்குச் சைவசமயத்தின் அரிய தத்துவங்களைத் தெரிய வைப்பதே இக்காலத்தில் மிக அவசியமான தொண்டு என்று கருதுகின்றேன். அத்தகைய தொண்டு இம்மன்றத்தின் மூலம் நடைபெறுவது போற்றத்தக்கது.

8. உலகம் விஞ்ஞானரீதியில் வெகுவிரைவாக முன்னேறிக்கொண்டு வருகிறது. விஞ்ஞான அறிவு மனிதனுக்கு வளர, வளர தன்னுடைய சக்தியை மிகைப்படுத்தி மதிப்பிட்டுக்கொண்டு இறைவனருளால்தான் இப்பிரபஞ்சம் நடைபெறுகின்றது என்ற நினைவு மனித உள்ளத்திலிருந்து மறைந்துவிடுமோ என்று அஞ்சவேண்டிய காலமாகிவிட்டது. அத்தகைய பெருமித மனப்போக்குக்குச் சரியான மருந்து இறைவனுக்கும், உயிர்களுக்கும் உள்ள தொடர்பை அறிவதே. அவனருளாலன்றி அந்த ஞானத்தை ஆன்மா தானகப் பெற முடியாது. எல்லா சமயங்களும் பறைசாற்றும் உண்மை இது. நானே பிரம்மம் என்று வாதாடும் வேதாந்திகளை இங்குக் குறிப்பிடவேண்டும். சைவசித்தாந்தத்தின் கொள்கை அதுவல்ல. நம்கொள்கை உயிர்வேறு, ஆண்டவன் வேறு. பதி வேறு, பசு வேறு. இரண்டும் அநாதியே; ஆனாலும் மலத்துடன் கட்டுண்ட உயிருக்கு இறைவன் திருவருளாலன்றி மலம் நீங்கி உண்மை ஞானம் தெரிவதில்லை. அத்திருவருளைப் பெறுவதற்கு நாம் அன்றாடம் இறைவனைத் தியானம் செய்து பக்குவம் அடையவேண்டும். அப்படிப் பண்பட்ட பக்குவத்தை அடைவதற்குப் பாமர மக்களுக்கு சமயம் பெரிதும் உதவுகின்றது. அத்தகைய சைவ சமயத்தின் கொள்கைகளையும் உண்மைகளையும் நம் மக்களிடை பரப்புவதற்குத் தருமை ஆதீனம் செய்து வரும் தொண்டு இந்த இறைபணி மன்றம் மூலம் கலங்கரை விளக்கம்போல பிரகாசிக்கின்றது. அத்தகைய மன்றத்தின் 7 ஆவது ஆண்டு நிறைவு விழாவிற்கு என்னை அழைத்துப் பெருமைப் படுத்தியதற்கு என் நன்றி. இந்த மன்றம் மேன்மேலும் வளர்ந்தோங்கி சைவசமயத்திற்கும் சைவமக்களுக்கும் மேன்மேலும் பணிசெய்யவேண்டும் என்று இறைவனை வழுத்துகின்றேன்.

எதிர்காலம் ☞	கே. முத்துஜோதிடர்

(சார்வரிஹூ தைமீ 1௳ முதல் 29௳ முடிய)

(14—1—61 முதல் 11—2—61 முடிய)

தை மாதம் முதல் தேதி ஸ்திரவாரம் உதயத்துக்கு மகர சங்கராந்தி புண்ணியகாலம். சூரியன் மகரராசி பிரவேச பலத்தால் உலகேங்கும் சுபிக்ஷம் உண்டாகி, தன தான்ய விருத்தியுடன் தர்மஸ்தாபனங்களுடன் எல்லாம் ஓங்கிநின்று பிரஜைகள் சந்துஷ்டர்களாய் இருந்து கடவுளே வழிபடுவதற்குப் பால் போங்குமாறு ஸ்ரீ ஸர்வேச்வரன் அருள் புரிவாராக. எங்கும் பால் போங்குக. சுபம்.

1. மேஷம். அசுவதி - பரணி - கார்த்திகை ¼

அசுவதி நக்ஷத்திரம் நான்கு பாதங்களும், பரணி முதல் பாதமும் சகல வைபவங்களேயும் அடைந்துகோண்டு சுப சந்தோஷங்களே அடையச்செய்யும். பரணி 2, 3, 4 பாதங்களும், கார்த்திகை முதல் பாதமும் மிச்ர பலனேத் தரும். அடிக்கடி சஞ்சாரம் ஏற்படச்செய்யும். விவசாய பலன் குறைந்து காட்டும். ஈதிபாதைகளில் தொந்திரவு உண்டாக்கும். புதன், வெள்ளி சுபமாகும்.

2. விருஷபம். கார்த்திகை ¾, ரோஹிணி - மிருகசீர்ஷம் ½

விருஷபராசி 9 பாதங்களும் சிரம பலனேத்தரும். மனம் நிம்மதியாய் இருக்கச்செய்யாது. வரவுக்கு மிஞ்சின செலவுகளும், அநேக இடைஞ்சல்களும் காட்டும். தெய்வ பிரார்த்தனேயால் மாறும். புதன், வெள்ளி சுபமாகும்.

3. மிதுனம். மிருகசீரிஷம் ½, திருவாதிரை - புனர்பூசம் ¾

மிதுனராசி 9 பாதங்களும் மிச்ர பலனேத் தரும். வியவகாரம் உற்பத்தியாகும். சத்ருபாதை, ரோகபாதை அதிகமாகும்.

குடும்பத் தொல்லைகளால் மனம் சலிக்கும். கடைசியில் தெய்வ பலத்தால் சாந்தி ஏற்படும். ஞாயிறு, திங்கள் சுபமாகும்.

4. கடகம். புனர்பூசம் $\frac{1}{4}$, பூசம் - ஆயில்யம்

கடகராசி 9 பாதங்களும் உத்தியோகத்தில் மேல் பதவிகளைத் தரும். நஷ்டமான பொருள் தானாக வந்துசேரும். அசாததியமெல்லாம் சுலபசாத்தியமாகும். ஆரோக்யம் உண்டாகும். குடும்பம் ஓங்கும். புதன், வியாழன் சுபமாகும்.

5. சிம்மம். மகம் - பூரம் - உத்திரம் $\frac{1}{4}$

சிம்மராசி 9 பாதங்களும் மேலோர், பெரியோர் அன்பைத் தரும். தெய்வபலம் ஓங்கும். உத்தியோக உயர்வு ஏற்படும். வியாபாரிகள் லாபம் அடைவார்கள். எங்கும் தர்மசிந்தனை ஓங்கச்செய்யும். புதன், வெள்ளி சுபமாகும்.

6. கன்னி. உத்திரம் $\frac{3}{4}$, ஹஸ்தம் - சித்திரை $\frac{1}{2}$

கன்யாராசி 9 பாதங்களும் தெய்வீகத் தன்மையோடு பிரகாசிக்கச்செய்யும். நினைத்ததெல்லாம் சுலபமாய்க் கைகூடும். தொழில்ஏற்றம், குடும்ப விருத்தி, தனதான்யப்பெருக்கு, கிரக சுகம், ஆரோக்கியம் முதலியவை நிரந்தரமாய் நடக்கச்செய்யும். தர்மம் ஓங்கும். உலகில் நன்மதிப்பும், தெய்வீகத்தன்மையோடு பிரகாசமும் ஏற்படும். வியாழன், வெள்ளி சுபமாகும்.

7. துலாம். சித்திரை $\frac{1}{2}$, சுவாதி - விசாகம் $\frac{3}{4}$

துலாராசி 9 பாதங்களும் விசேஷ கீர்த்தியை உண்டு பண்ணும். குடும்ப சுகம் அதிகரிக்கும். எதிர்பாராதபடி தன தான்ய லாபங்கள் தானாக வந்துசேரும். நல்லோர் பெரியோர் அன்பு கிட்டும். வியவகாரம் ஜெயிக்கும். தூரத்திலிருந்து வரவேற்புப் பத்திரிகை வரும். எல்லாம் தெய்வீகத் தோற்ற மாகவே ஏற்படச்செய்யும். புதன், வியாழன் சுபமாகும்.

8. விருச்சிகம். விசாகம் $\frac{1}{4}$, அனுஷம் - கேட்டை.

விசாகம் 4-ம் பாதம் சுபமிராது. வீண் அலைச்சல்களையும், அதிகச் செலவினங்களையும் உண்டுபண்ணும். அனுஷம்

நான்கு பாதங்களும், கேட்டை நான்கு பாதங்களும் இடம் மாறி சுபத்தைத் தரும். உத்தியோக உயர்வு, வியாபார விருத்தி, குடும்பசுகம் எல்லாம் நன்மையாகவே இருக்கும். பந்துமித்திர கல்யாண வைபவங்களும் ஏற்படச்செய்யும். வியாழன், வெள்ளி சுபமாகும்.

9. தனுசு. மூலம் - பூராடம் - உத்திராடம் $\frac{1}{4}$

தனுர்ராசி 9 பாதங்களும் மிச்ரபலனைத் தரும். ஆனாலும் நஷ்ட தனபிராப்தியும், நல்லோர் பெரியோர் அன்பும், தெய்வீக பலமும் ஏற்படச்செய்யும். மனம் சாந்தி அடையாமல் இருக்கும். வியாழன், வெள்ளி சுபமாகும்.

10. மகரம். உத்திராடம் $\frac{3}{4}$, திருவோணம் - அவிட்டம் $\frac{1}{2}$

மகரராசி 9 பாதங்களும் மேல் பதவியைத் தரும். கீர்த்தி பத்திரம் கிடைக்கச்செய்யும். ஆனாலும் அதிக உழைப்பு ஏற்படும். மேலோர் பெரியோர் அன்பு கிடைக்கும். வியவகாரம் ஜெயிக்கும். சத்ருநாசம் ஏற்படச்செய்யும். மனம் சாந்தி அடையும். புதன், வெள்ளி சுபமாகும்.

11. கும்பம். அவிட்டம் $\frac{1}{2}$, சதயம் - பூரட்டாதி $\frac{3}{4}$

கும்பராசி 9 பாதங்களும் சுபமாகவே நடக்கும். இல்லறம் ஓங்கும். ஆரோக்கியம் உண்டாகும். கிரய விக்கிரயங்கள் ஏற்படும். உலகபிரசித்தி ஏற்படச்செய்யும். தூர யாத்திரை ஏற்படும். மனம் சந்தோஷம் அடையும். சனி, செவ்வாய் சுபமாகும்.

12. மீனம். பூரட்டாதி $\frac{1}{4}$, உத்திரட்டாதி - ரேவதி.

மீனராசி 9 பாதங்களும் தெய்வீகத்தன்மையோடு விளங்கச் செய்யும். உத்தியோக உயர்வும், தொழில் மேன்மையும் ஏற்படும். எதிர்பாராத நஷ்ட தனங்கள் தானாக வந்துசேரும். ஆரோக்கியம் உண்டாகும். சதா தெய்வசிந்தனையே முன் நிற்கும். சகலமும் சாதிக்கக்கூடிய காலமாகும். சனி, செவ்வாய் சுபமாகும்.

குறிப்பு :— மேற்படி தை மாதமும் ஈதிபாதைகளால் தன தான்யங்களுக்குக் குறைவு காட்டும். தோத்துநோய்கள் ஆங்காங்கு தோன்றி ஜனங்களுக்குப் பயத்தை உண்டுபண்ணும். சென்ற மாத இதழில் எழுதினதுபோலவே சென்றமாதம் முதற்கோண்டே பிலவ வருஷம் பங்குனி மாதம் முடிய ஒவ்வொரு மாதத்திலும் பெரிய கிராமங்களிலும், நகரங்களிலும் கனதனவான்கள், தர்மிஷ்டர்கள் ஒன்றுசேர்ந்து மேற்கண்ட தோஷங்கள் அணுகாமல் மகாஜனங்கள் சுகவாழ்வு வாழ்வதற்கு முன்கண்டபடியே சகலமும் நடத்திவர சுகமுண்டாகும். கடவுள் காப்பாராக.

மதிப்புரை

பாரதிவிழாக் கவியரங்கப்பாடல்

பாடியவர் :- தமிழ்வள்ளல் சேவு, மே. மெய்யப்ப செட்டியார் அவர்கள். பக்கங்கள் 7. காரைக்குடி இந்துமதாபிமான சங்கம் 43 ஆவது ஆண்டுவிழா.

திருஞானசம்பந்தப் பெருமானுரின் திருமுறைப் பெருமைகளைச் சுருக்கி விளக்கமாக இந்நூல் எழுதப்பெற்றுள்ளது. தேவாரத் திருமுறைகள் ஏழும் பஞ்சப்பிரம மந்திரம் என்று போற்றப்படும், அவற்றுள் மூன்று திருமுறைகளாய் முந்நூற்றெண்பத்து நான்கு திருப்பதிகங்களை யுடையதாய் விளங்குவது திருஞானசம்பந்தர் தேவாரம் என்று தொடங்கி திருநாவுக்கரசர், திருநாவலூரர் சேதிராயர் முதலியோர் சம்பந்தர் தேவாரத்தைப்போற்றிச் சாற்றிய மேற்கோள்களையும் காட்டி நூலின் உட்பொருளை ஆராய்கின்ருர் ஆசிரியர். சம்பந்தர் தன் சீர்சாற்றும் தகைமை, பாடல் ஓதுவார் பயன் கூறல், இயற்கையழகினை இயம்பும் முறைமை, சம்பந்தர் வாக்கு சங்கரன் தனதெனல் முதலிய தலைப்புக்களால் நன்கு ஆராய்ந்து நூலின் பெருமையை விளக்கியுள்ளார் திரு. செட்டியார் அவர்கள்.

சிவபக்தியும், சிவபுண்ணியமும் சிவனடியார்களிடத்தில் அளவிட முடியாத அன்பும், பண்பும் கொண்ட திரு. செட்டியார் அவர்களின் பணி போற்றுதற்குரியது.

— வி. சா. குருசாமி